# ஆரம்பக்கல்வி




ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி.வீரராகவன்.

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் அணா 4

| மலர் 22 | ஜனவரி 1961 | இதழ் 1 |
|---|---|---|

## ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்கு ஆபத்தைத் தரும் திட்டம்!

அடுத்த கல்வி ஆண்டிலிருந்து தமிழ்நாட்டு ஆரம்பப் பள்ளிகளுக்குரிய தமிழ்ப் பாட புத்தகங்கள் அனைத்தும் தமிழ்நாட்டு ஆட்சியாளர்களாலேயே வெளியிடப்படும் என்று சொல்லப்படுகிறது. இதைப் பற்றிய திட்டவட்டமான அறிவிப்பு எதனையும் ஆட்சியாளர்கள் இதுவரை வெளியிடவில்லை என்றாலும், அநேகமாக இப்படிப்பட்ட திட்டம் நடைமுறைக்கு வரக்கூடும் என்று பரவலாகப் பேசப்பட்டுவருகிறது.

ஆரம்பப் பள்ளிகளுக்குரிய தமிழ்ப் பாட புத்தகங்களை அரசாங்க மயமாக்கும் இந்தத் திட்டம் உண்மையிலேயே நடைமுறைக்கு வருமானால், தமிழகத்து ஆரம்பக் கல்வியின் ஒழுங்கான வளர்ச்சிக்கு ஏற்படக்கூடிய முட்டுக்கட்டை அதைவிட

வேறென்று இருக்கமுடியாது. அது மட்டுமல்ல, நம்முடைய நாட்டில் இப்போதுதான் சிறிது சிறிதாக வளர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வருகின்ற ஜனநாயகக் கோட்பாட்டிற்கும் அந்தத் திட்டத்தால் அளவுகடந்த கெடுதி உண்டாகும் என்பதும் உறுதி.

இன்றையதினம் இந்த நாட்டில் உள்ள சூழ்நிலையில், அரசாங்கத்தாரே பாட புத்தகங்களை வெளியிடத் தொடங்கினுல், அந்தப் புத்தகங்களில், ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ள கட்சியின் கொள்கைகளும் கருத்துகளும் எண்ணங்களும் ஏற்பாடுகளும் இடம் பெற்றுவிடும். ஆளும் கட்சியின் தலைவர்கள் பற்றிய வாழ்க்கை வரலாறுகளும், அந்தக் கட்சியோடு தொடர்புடைய அமைப்புகள் பற்றிய விளக்கங்களும் இடம் பெற நேரும். ஆட்சியாளர்கள் மேற்கொள்கின்ற திட்டங்கள் பற்றிய பாராட்டும் விளக்கமும் நிச்சயம் இடம் பெறும். இப்படியெல்லாம் நிலைமை உருவானுல், பாட புத்தகங்கள் பாட புத்தகங்களாக இராமல் அரசாங்கக் கொள்கை விளக்க ஏடுகளாகவும் அரசாங்கத் தலைவர்களின் புகழ்பாடும் இதழ்களாகவும் உருமாறி, கல்வியின் தரம் பெரிதும் குறைந்துவிடும். இந்தவகையில் ஒரு குறிப்பிட்ட கட்சி ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ள நேரத்தில் பாடபுத்தகங்களில் அந்தக் கட்சியின் கொள்கைளும் ஏற்பாடுகளும் இடம் பெறுவதுபோலவே, அந்தக் கட்சி ஆட்சிப்பீடத்தைவிட்டு அகன்று, மற்றோர் கட்சி ஆளும் பொறுப்பை ஏற்றதும் அப்படி ஏற்கும் கட்சியின் கருத்துகளுக்கு ஏற்பப் புத்தகங்களும் மாற்றி அமைக்கப்படும். இப்படியெல்லாம் ஆட்சியாளர்களின் கருத்துக்களையும் கொள்கைகளையும் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பரப்புகின்ற கருவிகளாகப் பாட புத்தகங்கள் அமைவது சர்வாதிகார ஆட்சி முறைக்கு மிக மிகப் பொருத்தமான ஏற்பாடாகும். ஆனுல் ஜனநாயக ஆட்சிமுறையில் இப்படிப்பட்ட நிலைமை அமையுமாயின், அதனுல் ஜனநாயகச் செடியின் ஆணி வேரே ஆட்டம் கண்டுவிடும் என்பதை யார்தானுகட்டும், எப்படி மறுத்துவிடமுடியும்?

பல்வேறு பதிப்பகங்கள் பல்வேறு ஆசிரியர்களைக் கொண்டு ஒரே வகுப்புக்கும் ஒரே பாடத்துக்கும் உரிய பல்வேறு புத்தகங்களை வெளியிட்டு வருகின்ற தற்போதைய ஏற்பாட்டால், வெவ்வேறு ஆசிரியர்கள், தத்தம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் திறமைக்கும் தகுதிக்கும் கற்பனை உணர்ச்சிக்கும் எழுத்தாற்றலுக்கும் ஏற்றபடி வெவ்வேறு வகையான புத்தகங்களைப் படைத்து அளிக்க முடிகிறது. ஒரே வகுப்புக்கு உரிய ஒரே பாடபுத்தகத்தை ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் அமைக்கின்ற முறைக்கும் எழுதுகின்ற வகைக்கும், இன்னோர் ஆசிரியர் அமைக்கின்ற முறைக்கும்

எழுதுகின்ற வகைக்குமிடையே எத்தனையோ வேறுபாடுகள் இருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஒரு பூந்தோட்டத்தில் மலர்கின்றவை அத்தனையும் மலர்கள்தான் என்றாலும், மல்லிகைச் செடியில் மலர்கின்ற மலருக்கும் ரோஜாச் செடியில் பூக்கின்ற மலருக்குமிடையே வண்ணத்தில்—வடிவத்தில்—அமைப்பு முறையில்—இதழ்களின் அடுக்கில் எத்தனை எத்தனை வேறுபாடுகளை நாம் கண்டு மகிழ்கிறோம்! அதே போலத்தான் பல்வேறு ஆசிரியர்கள், பாடபுத்தகங்களை அமைக்கும்போது பல்வேறு வகையான அழகுகளும் அமைப்புகளும் பூத்துக்குலுங்குவதை நாம் அறிந்து போற்ற முடிகிறது. ஆனால் அரசாங்கத்தாரே பாடபுத்தகங்களை வெளியிடும்போது, யாராவது ஓர் ஆசிரியர் மட்டுமே ஒரு வகுப்பின் ஒரு பாடத்திற்கு உரிய புத்தகத்தை எழுதுகிற வாய்ப்பைப் பெறுவார். ஏனைய ஆசிரியர்களுக்கெல்லாம் அவர்களுடைய உள்ளங்களில் பவனிவரும் பலவகைக் கற்பனைகளையும் அமைப்பு முறைகளையும் பாட புத்தகங்களாக உருவாக்கி நாட்டிற்கு அளிப்பதற்குரிய வாய்ப்பு இல்லாமற் போய்விடும். ஒரு குறிப்பிட்ட ஆசிரியரின் எழுத்தாற்றல் மட்டுமே வெளிப்பட்டு, ஏனைய ஆசிரியப் பெருமக்களின் எழுத்தாற்றல் முழுவதும் வெளிவர வாய்ப்பில்லாமல் முடங்கிப் போவதால், எதிர்காலக் குடிமக்களாகிய இக்கால மாணவச் சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய இழப்பு எத்துணை அதிகம் என்பதை நாம் இயம்பவா வேண்டும்?

பல்வகை ஆசிரியர்களின் பலவகைக் கருத்தோட்டங்களுக்கு ஏற்ற வெவ்வேறு புத்தகங்கள் வெளிவராமற் போவது மட்டுமல்ல அரசாங்கத் திட்டத்தால் ஏற்படும் இழப்பு. வெவ்வேறு பதிப்பகங்கள் புத்தகங்களை வெளியிடும்போது, ஒவ்வொரு புத்தகத்திற்கு ஒவ்வொரு வகையான அமைப்புமுறையும், அழகு வடிவும் அச்சுத்திறமும் அமைந்துவிடுகின்றன. அரசாங்கத்தாரே ஒரு வகுப்புக்குரிய எல்லாப் புத்தகங்களையும் வெளியிடும்போது, அவை அத்தனையும் ஒரேவித வடிவில், ஒரே வித வண்ணத்தில், ஒரே வித அமைப்பு முறையில் தானே இருக்கமுடியும்.

பாட புத்தகங்களைத் தேசீய மயமாக்கும் திட்டத்தால் மற்றொரு பெரிய கெடுதியும் ஏற்படுவது இயற்கை. இப்போதுள்ள ஏற்பாட்டின்படி, ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் ஆசிரியப் பெருமக்களும், பல்வேறு பதிப்பகங்களின் பாடபுத்தகங்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்த்து, எந்தப் பதிப்பகத்தாரின் புத்தகம் தங்கள் வட்டாரத்துப் பிள்ளைகளின் மன இயல்புக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றதாகக் காட்சியளிக்கிறதோ—எந்தப் பதிப்பகத்தாரின் புத்தகம் தங்கள் கண்ணோட்டத்தின்படி மாணவர்களுக்கு மிக மிக ஏற்புடையதாகத் தோற்றமளிக்கிறதோ அந்தப் புத்தகத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். பல்வேறு பாடபுத்தகங்களை

ஒப்பிட்டுப் பார்த்து சிறந்த புத்தகத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் இந்த உரிமை, அரசாங்கத்தாரே எல்லாப் புத்தகங்களையும் வெளியிடுவது என்கிற ஏற்பாடு நடைமுறைக்கு வருமானால், ஆசிரியப் பெருமக்களிடமிருந்து பறிபோய்விடும். ஆரம்பக் கல்வியானது பெருமையும் பூரிப்பும் அளிக்கத்தக்கவகையில் வளர்ந்து வலிவும் பொலிவும் மிக்கதாகத் திகழ்ந்து, எழிலும் ஏற்றமும் உடையதாகக் காட்சியளிக்க வேண்டுமானால், இந்த மிக முக்கியமான உரிமை ஆசிரியர்களிடம் இருந்தாகவேண்டும் அல்லவா? ஆம் எனில், அரசாங்கத்தாரே பாட நூற்களை வெளியிடும் ஏற்பாடு நடைமுறைக்கு வரக்கூடாது அல்லவா?

ஆசிரியப் பெருமக்களுக்கு இப்போது கிடைத்து வரும் ஊதியம், கண்ணியமான முறையில் வாழ்வதற்குப் போதுமானது அன்று என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். வேகமாக உயர்ந்து வானளாவிப் பறந்துகொண்டிருக்கிற விலைவாசிகளைத் தங்களுக்குக் கிடைக்கிற மிகக்குறைந்த ஊதியத்தைக் கொண்டு எட்டிப்பிடிக்க முடியாமல் அவர்கள் வேதனைக்கு ஆளாகித் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் நாடறிந்த உண்மை. "ஆசிரியத் தொழிலா- அது அல்லவா ஏனைய எல்லாத் தொழில்களையும் விடப் புனிதம் நிறைந்த தொழில்!" என்று போற்றித் திரு அகவல் பாடாத அமைச்சர் பெருமக்கள் இல்லை. "எழுத்தறிவித்தவர்கள் இறைவர்கள் அல்லவா? வாழ்க அப்பெருமக்கள்! வளர்க அவர்கள் தொண்டு!" என்று வாழ்த்துரை மடல் வழங்காத கல்வி அதிகாரிகள் இல்லை! "ஒரு நாட்டின உயர்வு கல்வியின் உயர்வைப் பொறுத்திருக்கிறது என்றால், அக்கல்வியின் உயர்வு ஆசிரியர்களின் உயர்வையே பொறுத்திருக்கிறது" என்று காரண காரிய முறைப்படி விளக்கவுரை வழங்காத பத்திரிகையாசிரியர்கள் இல்லை. அரசியல் தலைவர்கள் முதல் ஊராட்சிமன்ற உறுப்பினர்கள் வரையில், குடியரசுத்தலைவர் முதல் சின்னஞ் சிறு அதிகாரிவரையில், ஏறத்தாழ எல்லோருமேதான் ஆசிரியத் தொழிலின் அருமையையும் பெருமையையும், அந்தத் தொழிலால் நாட்டுக்கு ஏற்படக்கூடிய நன்மையையும் திறமையையும் தெள்ள தெளிவாக எடுத்து விளக்கி வருகிறார்கள். பாராட்டுதல்களும் புகழ் மாலைகளும் ஏராளமாகத்தான் கிடைக்கின்றன ஆசிரியர்களுக்கு. ஆனால் அவர்களுக்குக் கிடைக்கிற ஊதியம்—அதுதான் மிகக் குறைந்த நிலையில் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், ஆசிரியர்கள் பலர் தமக்குக் கிடைத்து வருகிற குறைந்த ஊதியத்தைச் சற்றே அதிகப் படுத்திக்கொள்ள ஒரு சிறந்தவாய்ப்பாகக் கொண்டிருப்பது பாடபுத்தகம் எழுதுகிற துறையைத்தான். எண்ணற்ற ஆசிரியர்கள், பல்வேறு பதிப்பகங்களுக்குப் பாடநூல்கள் இயற்றித்தந்து அவற்றின் வாயிலாக ஓரளவு நல்ல வருமானத்தைப் பெற்று வருகிறார்கள். ஆனால் அரசாங்கத்தாரே

பாட நூல்களை வெளியிடத் தொடங்கினால் இரண்டோர் ஆசிரியர்களுக்கு மட்டுமே இந்த வாய்ப்பு கிடைக்கும். ஏனையோர் அனைவரும் இப்போது அவர்கள் பெற்றுவருகிற இந்தத் துணை வருமானத்தை இழப்பர். ஆசிரியர்களின் வறுமைத் துயரத்தை ஓரளவு போக்க வல்லதாக உள்ள இந்தத் துணை வருமான வாய்ப்பை அவர்களிடமிருந்து தட்டிப் பறிக்கத்தக்க ஒரு திட்டத்தை ஆட்சியாளர்கள் கொண்டுவர இருப்பது நியாயந்தானா? முறைதானா? ஒழுங்கான திட்டம் ஆகுமா அது?

பற்பல பதிப்பகத்தார் பாடபுத்தகங்களை வெளியிடுகிற இன்றைய நிலையில், ஆண்டுதோறும் ஏராளமான அச்சகங்களுக்கும், அந்த அச்சகங்களில் பணியாற்றும் எழுத்துக்கோப்பவர்கள்—இயந்திரங்களை ஓட்டுபவர்கள்—புத்தக பைண்டு செய்பவர்கள்—அச்சுப் படிகளைத் திருத்துபவர்கள்... புத்தகங்களை கட்டுக் கட்டிக் வெளியூர்கட்கு அனுப்புபவர்கள்... பதிப்பகங்களில் எழுத்தர்களாகப் பணி செய்பவர்கள் முதலிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கும் வேலை கிடைத்து வருகிறது. அரசாங்கத்தார் பாடநூல்களை வெளியிடும்போது இவர்களிற் பெரும்பாலோர் தம் வேலைகளை இழந்து திண்டாடுவது உறுதி. ஏற்கனவே நாட்டில் வேலை கிடைக்காமல் வேதனைப்படுவோரின் தொகை பயங்கரமான அளவினதாக இருக்கிறது. இந்த நிலையில் மேலும் பல ஆயிரக்கணக்கானவர்களை, அவர்கள் பெற்றுள்ள வேலையை இழக்கும்படி செய்கிற ஒரு திட்டத்தை அரசாங்கத்தார் கொண்டுவருவது ஒரு நாளும் பொருத்தமான செயல் ஆகாது. வேலை கிடைக்காமல் திண்டாடுபவர்கட்கு வேலையைத் தேடித் தருவதுதான் அரசாங்கத்தாரின் கடமையாகுமே தவிர வேலையில் உள்ளவர்களை வேலையைவிட்டு விரட்டத்தக்க திட்டம் தீட்டுவது எப்படி முறையாகும்?

“தனியார் பதிப்பகங்கள் வெளியிடுகின்ற பாட நூல்களின் விலை மிக அதிகமாக இருக்கிறது. ஆகவேதான் அரசாங்கமே பாடநூல்களைக் குறைந்த விலையில் வெளியிட எண்ணுகிறார்கள்” என்று சிலர் கூறுகிறார்கள். தனியார் பதிப்பகங்கள் வெளியிடும் நூல்களின் விலைகள் உண்மையிலேயே அதிகமாயிருக்கின்றன என்று நாம் கருதவில்லை. பல்வேறு பதிப்பகங்களுக்கிடையே பலத்த போட்டி இருக்கின்ற காரணத்தால், எல்லாப் பதிப்பகங்களுமே பாடபுத்தகங்களின் விலைகளைக் குறைந்த அளவில்தான் நிலைநிறுத்த வேண்டி உள்ளது. அரசாங்கத்தாரே பாடபுத்தகங்களை வெளியிட்டாலும் விலைகள் இப்போது இருப்பதைவிடக் குறையும் என்று நாம் கருத வில்லை. ஒருவேளை இப்போது உள்ள விலைகள் உண்மையிலேயே அதிகம் என்று ஆட்சியாளர்கள் கருதுவதானால், இத்தனைப் பக்கங்கள் கொண்ட புத்தகத்திற்கு இவ்வளவுதான் விலை இருக்கலாம் என்கிற முறையில் அவர்கள் விலைக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்கலாமே! தினசரிப் பத்திரிகைகளின் விலைகளைக் கட்டுப்படுத்த மத்திய அரசாங்கத்தார்

இப்போது ஒரு திட்டத்தைத் தீட்டி வருகிறுர்கள் அல்லவா! அதே போன்ற ஒரு திட்டத்தைத் தமிழ்நாட்டு அரசாங்கத்தார் பாட புத்தகங்களின் விலைகளைக் கட்டுப் படுத்துவதற்காகக் கொண்டு வரலாம் அல்லவா? உண்மையிலேயே பாடநூல்களின் விலைகள் அதிகமாக இருந்தால் அவற்றைக் கட்டுப்படுத்த இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை உருவாக்குவதுதான் முறையே தவிர, "புத்தகங்களின் விலைகள் அதிகம்—ஆகவே நாங்களே புத்தகங்களை வெளியிடுகிறோம்'' என்று வாதாடுவது பொருத்தமாகாது.

தனியார் பதிப்பகங்கள் வெளியிடுகின்ற பாடபுத்தகங்கள், பெரும்பாலும் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க வண்ணமும் அழகும் மிகுந்தனவாய், மாணவர்களின் உள்ளங்களை எளிதில் கொள்ளை கொள்ளத்தக்க அச்சும் அமைப்பும் படைத்தனவாய்த் திகழ்கின்றன. ஆனால் அரசாங்கத்தார் வெளியிடுகின்ற புத்தகங்களோ பெரும்பாலும் இரயில்வே கால அட்டவணைப் புத்தகத்தைப் போல, "அழகா—அப்படி என்றால் என்ன?'' என்று கேட்கத்தக்க நிலையில்தான் அமைந்துள்ளன. இளம் பிள்ளைகளுக்கான பாட புத்தகங்கள் இந்த முறையில் வெளியாகுமானால், அந்தப் புத்தகங்களைக் கண்டதும், அந்தப் பிஞ்சு உள்ளங்கள் வெறுப் புணர்ச்சியைத்தான் கொள்ளமுடியுமே தவிர, விருப்பத்தோடு அவற்றை எடுத்துப் படிக்கவேண்டும் என்கிற ஆர்வத்தைப் பெறமுடியாது.

எஸ். எஸ். எல். சி. வகுப்புக்குரிய தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் வெளியிட்ட ஆங்கிலத் துணைப் பாடநூல் ஒன்றைப் பற்றிய வழக்கு சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னை உயர் நீதி மன்றத்தில் வந்தபோது, அந்த வழக்கை விசாரித்த நீதிபதி, "இந்தப் புத்தகத்தில் எழுத்துப் பிழைகளும் வாக்கியப் பிழைகளும் ஏராளமாக இருக்கின்றன'' என்றும், "ஒரு பாடபுத்தகம் எப்படி இருக்ககூடாது என்பதை விளக்குவதற்காக எழுதப்பட்டது போல் அவ்வளவு பிழைகள் மலிந்ததாக இருக்கிறது இந்தப் புத்தகம்'' என்றும், மிகக் கடுமையான முறையில் தீர்ப்பு அளித்திருந்ததை இதற்குள் நாடு மறந்திருக்க முடியாது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது தமிழ்நாட்டு முதுமொழி. அரசாங்க அதிகாரிகளின் மேற்பார்வையில் வெளியாகிற ஒரு புத்தகம் எவ்வளவு கவனக் குறைவாக வெளியாகக்கூடும் என்பதற்கு இந்த ஆங்கிலத் துணைப் பாடநூல் விவகாரம் ஒன்றே போதுமான சான்றாகும்.

எந்தக் கண்ணோட்டத்திலிருந்து எவ்வளவு நிதானமாக ஆராய்ந்து பார்த்தாலும் சரி, அரசாங்கத்தாரே பாடநூல்களை வெளியிடுவது என்கிற ஏற்பட்டால் அளவுகடந்த தீமைதான் உருவாகுமே தவிர, நன்மை சிறிதளவும் ஏற்பட முடியாது என்கிற முடிவுக்குத்தான் நாம் வரமுடிகிறது. நாம் மட்டுமல்ல கல்வித் துறையில் ஆழ்ந்த அனுபவம் படைத்த எவரும் இந்த முடிவுக்குத் தான் வரமுடியும்.

# திருமண அழைப்பு

—x—

நிகழும் சார்வரி ஆண்டு தைத் திங்கள் 16-ஆம் நாள் 29-1-1961 ஞாயிற்றுக்கிழமை காலை 9-15 மணி அளவில்

என் முதல் மகள்

**திருநிறை செல்வி**

**இந்திராணி யம்மாளுக்கும்**

மாதர்பாக்கம் நீலம் திரு துரைசாமி நாயுடு அவர்களின்
இரண்டாம் மகன்

**திருநிறை செல்வன்**

**M. N. இராமச்சந்திரனுக்கும்**

சென்னை முத்தியாலுப்பேட்டை லிங்க செட்டித் தெரு 229 எண்ணுள்ள பாலு வெங்கட்ராம செட்டியார் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெறும். அவ்வமயம் தங்கள் சுற்றமும் நட்பும் சூழப்போந்து மணமக்களை வாழ்த்துமாறு வேண்டுகின்றேன்.

தங்கள் அன்பன்,

**பி. வீரராகவன்,**

ஆசிரியர், "ஆரம்பக் கல்வி"

# செந்தமிழ் வளர்க்கும் செம்மல்

[நாடெங்கிலும் உள்ள தமிழ் எழுத்தாளர் பெரு மக்களின் தனிப் பெரும் அமைப்பாகிய தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு 1961-ஆம் ஆண்டின் தலைவராக ஒரு முகமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார் பேராசிரியர்-புலவர்-அன்பு கணபதி அவர்கள். சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகச் சீரும் சிறப்பும் பொருந்திய முறையில் செந்தமிழ் தொண்டு புரிந்துவரும் அச் சிந்தனைச் செல்வரின் நற்பண்புகளைத் தமிழகம் நன்கறியும். நற்றமிழ் வளர்க்கும் அந் நல்லறிஞரைப் பற்றிய இரண்டு கட்டுரைகளை இங்கே வெளியிட்டுள்ளோம். முதற் கட்டுரை, அன்னாரின் வாழ்க்கை வரலாற்றையும், இரண்டாவது கட்டுரை, அன்னாரைப்பற்றி அறிஞர் பெருமக்கள் பலர் கொண்டுள்ள உயர்ந்த மதிப்பையும் நன்கினிது விளக்கிக் காட்டுகின்றன.]

## தமிழ் எழுத்தாளரின் புதிய தலைவர்.

[லால்குடி ப. அரங்கசாமி]

புலவர் அன்பு கணபதி, தஞ்சை மாவட்டத்தில் உள்ள அய்யம்பேட்டை, பசுபதி கோயிலில் 1917-ஆம் ஆண்டில் பிறந்தவர். அய்யம்பேட்டைக் கழக உயர்நிலைப் பள்ளியிலும், ஐயாற்றிலுள்ள அரசர் தமிழ்க் கல்லூரியிலும் முறையே கல்வி பயின்று, 1938ல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் 'வித்துவான்' பட்டம் பெற்றார்.

1938—39-ல் ஈரோட்டிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "விடுதலை"க்கு ஓராண்டு சென்னை நிருபராகப் பணியாற்றினார். ஐயாற்றில் இவர் மாணவராக இருக்கும்போதே பழைய "தமிழ் நாடு" (டாக்டர் பி. வரதராசுலு நாயுடு நடத்தி வந்தது), சென்னை 'விடுதலை' முதலிய பத்திரிகைகளின் செய்தி நிருபராகப் பணி புரிந்துவந்தார்.

1940 முதல் பச்சையப்பன் உயர் பள்ளியிலும், 1944-லிலிருந்து அக் கல்லூரியின் தமிழ்த் துறையிலும் இடம்பெற்று, துணைத் தமிழ்ப் பேராசிரியராக இன்று விளங்குகிறார்.

1944-ல் தொடங்கப் பெற்ற தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆரம்ப உறுப்பினர்களில் இவரும் ஒருவர். சென்னை ஒற்றைவாடை அரங்கில் திரு. ம. ப. பெரியசாமித் தூரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் சங்க முதல் மாநாட்டில் பங்கு கொண்டவர்.

1941-ல் காணப்பெற்ற தமிழ் வித்துவான் சங்கத்தின் செயலாளருள் ஒருவராக இருந்து பணியாற்றியதுடன், மாநிலத் தமிழாசிரியர் கழகமாகப் பெயர் மாற்றம் பெற்று, இன்று வளர்ந்

தோங்கி நிற்கும் அச்சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பணி யாற்றி வருகின்ருர். சென்னை (நகர)த் தமிழாசிரியர் கழகத்தின் தலைவராகச் சென்ற 3 ஆண்டுகளாக இருந்துவருகிருர்.

1943-ல் செட்டிநாட்டு அரசர் இராசா. சர். மு. அண்ணுமலைச் செட்டியாராலும், கோவைச் செல்வர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியாராலும் தொடங்கப்பெற்ற தமிழிசை இயக்கத்தின் ஆரம்பத் தொண்டருள் புலவர் அன்பு கணபதியும் ஒருவர். அன்று முதல் தமிழ் இசைச் சங்கத்தில் தொடர்பு கொண்டவர். ஆண்டுதோறும் அச்சங்கம் டிசம்பரில் நடத்திவரும் தமிழிசை விழாச் சார்பாக வெளிவரும் "தமிழ் இசை மலரின்" பதிப்பாசிரியராகச் சென்ற 17-ஆண்டுகளாக இருந்துவருகிருர்.

'பதி', 'அன்பு', 'தென்றல்', 'தஞ்சைவாணன்', 'தமிழய்யா', 'யார் எழுதினுல் என்ன?' முதலிய புனைபெயர்களில் மாணவப் பருவத்திலிருந்து இவர் கட்டுரை முதலியன அவ்வப்போது எழுதி வந்தவர்; வருபவர்.

'தென்றல் வாசகம்' முதலிய பெயர்களில் ஒன்று முதல் எட்டு வரையுள்ள வகுப்புகட்கும், செந்தமிழ் இலக்கியக் கலம்பகம்' தென்றல் தமிழ்க் கோவை போன்ற பெயர்களில் 8, 9-ஆம் வகுப்புகட்கும் பாடபுத்தகங்கள் எழுதியுள்ளார் 'பாவலரும் காவலரும்,' 'செந்தமிழ்ச் செல்வியர்' முதலிய இலக்கியக் கட்டுரைகள் கொண்ட சுவடிகள் இயற்றியுள்ளார்.

சென்னை அரசியலாரின் தமிழ்வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற (Tamil Development and Research Council) உறுப்பினராகவும், சென்னைப் பல்கலைக் கழகக் கல்விக் குழு (Academic Coun-cil)வின் உறுப்பினராகவும் இப்போது இருந்துவருகிருர்.

தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் இனிய அன்புக்குப் பாத்திரராக இருந்து அவர் வாழ்த்துக்களைப் பெற்ற இவர், இலக்கிய-சமூகத்துறைகளில் அவர் வழியைப் பின்பற்றி வருகிருர். சீர் திருத்த நோக்கும் போக்கும் வாழ்வில் கடைபிடித்து நிற்பவர். இன்றைய தலைசிறந்த எழுத்தாளருள் ஒருவரும் சிந்தனைச் செல்வருமான டாக்டர் மு. வ. அவர்களின் நெருங்கிய நண்பருள் ஒருவராக நின்று, அவரோடு, அவர் தலைமையில் தமிழ்த் தொண்டாற்றும் பேறு பெற்றவர். இன்றைய எழுத்துலகில் ஒரு திருப்பம் தந்த அறிஞர் சி என் அண்ணுதுரை அவர்களின் பழைய நண்பராக—தமிழ்த் தொண்டராக— இன்றும் அவர் அன்புக்கு உரியவராக இருப்பவர்.

500-க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பச்சையப்பன் கல்லூரி மாணவர் விடுதியின் துணைப் பொறுப்பாளராக (Dy. Warden)ச் சென்ற 3 ஆண்டுகளாக அவ்விடுதியில் வசித்துவரும் நம் புதிய தலைவர், பொதுவாக மாணவர்களின் நல்வாழ்வில் நாட்டமும், சிறப்பாக எதிர்காலத் தமிழ் இளைஞர் உலகின் முன்னேற்றத்தில் உறுதியான நம்பிக்கையும் கொண்டவராக இருக்கிருர்.

—'பாரதி'

# தமிழய்யா தலைவரானார்

## ["தையற்கலை" ஆசிரியர் கே. பி. சுந்தரம்]

தமிழ் மக்கள் எழுச்சியுற்று எழுந்து நின்ற காலம். எங்கும் "தமிழ் வாழ்க!" "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற பேரொலி பரவி நின்ற நேரம். அது 1938ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் ஆகும். இத்தகைய நிகழ்ச்சியை நேரில் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை யாயினும், இந் நிகழ்ச்சிகளைக் கேட்டு அறியும் வாய்ப்பை 1948ம் ஆண்டு ஒரு நாள் அன்னை டாக்டர் தருமாம்பாள் அம்மையார் அவர்கள் இல்லத்தில் அம்மையார் அவர்களின் வாயால் சொல்லக்கேட்டு மகிழ்ந்தவன் நான்.

1948ம் ஆண்டு எனது தொழில் துறையில் முன்னேற்றம் காண, டாக்டர் தருமாம்பாள் அவர்களைக் காண அவர்கள் இல்லம் சென்று இருந்தேன் ஒருநாள் மாலையில். அன்று நடைபெற்ற உரையாடல் இன்றும் என் நினைவில் உள்ளது. அன்னை அவர்களுடன் உரையாடிக் கொண்டு இருக்கையில் 40 வயது மதிக்கத்தக்க ஒருவர் வெண்ணிற ஆடை அணிந்தவராய்க் கையில் ஒரு பையுடன் எங்களை நோக்கி வேகமாக வந்து கொண்டு இருந்தார். அம்மையார் அவர்கள் பேச்சை நிறுத்தி விட்டுத் "தம்பி சிற்சபை! உனக்காகக், காலையிலிருந்து காத்து இருந்தேன். எங்கே அப்பா போய் இருந்தாய்? காலையிலேயே சென்னை வந்தாயாமே!" என்றார்கள். "ஆமாம் அம்மா, நானும் ஈழத்துச் சிவானந்த அடிகளும் காஞ்சிபுரத்தில் இருந்து சேர்ந்தே வந்தோம். அடிகள் தமிழய்யாவைக் காணவேண்டும் என்று கூறவே நானும் அவருடன் சென்றேன். ஈழத்து அடிகளும், தமிழய்யாவும் பழைய நிகழ்ச்சிகளைக் குறித்துப் பேசிக்கொண்டு இருந்தார்கள். நேரம்போனதே தெரியவில்லை. பகல் ஒருமணி ஆகிவிட்டது. அடிகள் வேறு அவசர அலுவல்கள் உள்ளன என்று கூறிச் சென்று விட்டார்கள். அதன் பிறகு அங்கேயே நானும் தமிழய்யாவும் பகல் உணவை அருந்தி விட்டுச் சிறிது ஒய்வு எடுத்துக்கொண்டபின் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு நேராக இங்குத்தான் வருகின்றேன். இனிமேல்தான் வெளியே சென்று நான் வந்த வேலைகளைக் கவனிக்க வேண்டும்" என்றார். அன்னை அவர்கள் சிற்சபை அவர்களை நோக்கி "பார்த்தாயா தம்பி, தமிழய்யாவின் நட்பை. தமிழய்யாவும், அடிகளும் பத்து ஆண்டுகளுக்குமுன் இந்தி எதிர்ப்பின்போது நமக்கு அறிமுக மானவர்கள். அன்று முதல் இன்றுவரை அவர்களது நட்பு சிறந்து விளங்குகின்றது" என்றார்கள்.

1938ம் ஆண்டில் கட்டாய இந்தியை எதிர்த்துத் தமிழ்காக்கத் திருச்சியிலிருந்து நூறு தொண்டர்களைக் கொண்ட ஒருபடை "தமிழர் பெரும்படை" என்ற பெயரில் சுமார் 250 மைல்கள் கால் நடையாகவே நடந்து வழியிலுள்ள நாடு நகரமெல்லாம் தமிழ் முழக்கம் செய்து 20 நாளில் சென்னை வந்து சேர்ந்தது. இப்படை 1938ம் ஆண்டு ஆகஸ்டு இரண்டாம் வாரத்தில், மறைந்த மாவீரர் பட்டுக்கோட்டை கே. வி. அழகிரிசாமி அவர்களைத் தளபதியாகவும், மறைந்த முதுபெரும் தலைவர் கரந்தை ஐ. குமாரசாமிப் பிள்ளை அவர்களைத் தலைவராகவும் கொண்டு திருச்சியிலிருந்து புறப்பட்டது. செப்டம்பர் முதல் வாரத்தில் சென்னை வந்து சேர்ந்தது. இப்படையின் முன்னணி வீரர்களில் ஒருவராகவும், "விடுதலை"யின் தனி நிருபராகவும், வந்த தமிழ் வித்துவானே இந்தத் தமிழப்யா ஆவார் என்றார்கள்.

டாக்டர் அம்மாவும், சிற்சபையும் அவர்கள் குடும்பத்தில் உள்ளவர்களின் நலன்களைத் தங்களுக்குள் அறிவதில் முற்பட்டனர்! நான் எழுந்து "அம்மா நான் சென்று வருகின்றேன், நாளை மறுநாள் வருகின்றேன். சமரசம் அவர்களிடம் நான் வந்து சென்றதாகக் கூறவும்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டேன். இதற்கு முன்பும் தமிழய்யா அவர்களைக் குறித்துத் திரு. என். வி. நடராசன் அவர்களும், பேராசிரியர் அவர்களும் கூறக் கேட்டிருக்கிறேன். "தமிழய்யாவை," இன்றைய மயிலை சிவமுத்து அவர்களைப்போன்று அறுபது கடந்த ஒரு பழைய தமிழாசிரியர் என நான் எண்ணியிருந்தேன் அன்று.

**1949ம் ஆண்டு நவம்பர் திங்கள் நான் முதன் முதலாகத் தமிழய்யாவைப் பச்சையப்பன் கல்லூரியில் சந்தித்தேன்.**

எனக்கினிய நண்பரும், என்னைப் பொதுப் பணியில் ஈடுபாடு கொள்ளச் செய்தவரும், எனது வாழ்க்கையில் நல்லுள்ளம் கொண்டவரும், இன்றைய சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் தொண்டாற்றி வந்தார்கள். அவ்வமயம் நடைபெற்ற கலை விழாவைக்காண நானும் பேராசிரியர் அவர்களுடன் கல்லூரிக்குச் சென்று இருந்தேன். அப்போது அன்பழகன் அவர்களால் எனக்குத் தமிழய்யா அவர்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்கள். நான் சற்றுத் திகைப்பு அடைந்தேன். 'இவரா, நாம் கேள்விப்பட்ட தமிழய்யா?" என்ற கேள்வி என் மனதில் எழுந்து அலைமோதியது. அன்பழகன் அவர்களை அணுகி "நான் கேள்விப்பட்ட தமிழய்யாவா இவர்" என்று கேட்டு என் கேள்விக்குத்தக்க விளக்கம் பெற்றேன். முதல் சந்திப்பிலேயே எங்கள் உள்ளங்கள் ஒன்று பட்டன. அன்று முதல் சென்ற 12 ஆண்டுகளாக அவருடன் பழகி வந்துள்ளேன், என்றாலும் 1955-ம் ஆண்டு என்

தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் வாயால் சொல்லக் கேட்கும் வரையில் தமிழய்யாவை நான் நன்றாக உணரவில்லை.

அந் நிகழ்ச்சியை இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன். அண்ணா அவர்கள் 1955-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள், சுந்தாவதனம் அவர்களின் மருத்துவ விடுதியில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார்கள். அடிக்கடி விடுதியில் இயக்க நண்பர்கள் அவரைப் பார்ப்பதும், அவருடன் உரையாடுவதும் உண்டு. அப்போது நான் அண்ணா அவர்களிடம் அணுக்கத் தொண்டனாக இருந்து வந்தேன். ஒரு நாள் காலை நேரம். நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன், என். வி. நடராசன், வாணன் ஆகியோரும், நானும் ஆக ஐந்து பேர்களும் பேசிக் கொண்டு இருந்தோம் மருத்துவ விடுதியில். அப்போது பச்சையப்பன் அறநிலையத்து அன்றைய டிரஸ்டிகளில் ஒருவரான பெரியார் டி. சண்முகம் அவர்கள் அண்ணாவைக் காண வந்தார்கள். அப்போது அன்பழகன் அவர்களும், டி. சண்முகம் அவர்களும் பச்சையப்பன் கல்லூரியைக் குறித்துப் பேசிக்கொண்டு இருந்தார்கள். இவர்கள் பேச்சின் நடுவில் தமிழய்யா அவர்களைப் குறித்தும் பேச்சு வந்தது. பேச்சின் நடுவில் குறிக்கிட்ட அண்ணா அவர்கள் "தமிழய்யா, 1938ல் நடந்த இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டு உழைத்த முக்கியத் தொண்டர்களில் ஒருவர். வாழ்க்கைச் சூழல்காரணமாக இன்று, அவர் பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியராக இருக்கிறார். எங்கு இருந்தாலும், அவர் நம்மவர்" என்றார். அன்றுதான் தமிழய்யா யார் என்பதை நன்றாக உணர்ந்தேன். அது முதல் சென்ற ஐந்து ஆண்டுகளாகத் தமிழய்யாவுடன் மிக நெருங்கிப் பழகிவருகிறேன்.

மற்றொரு சம்பவம். 1958ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் ஒரு நாள் மாலை மேல் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்களுக்காக நடந்த பாராட்டு விருந்தில் டாக்கர் மு. வ., பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் மாணவர் மன்றத்தின் தலைவர் மயிலை சிவமுத்து அவர்கள் தமிழய்யாவைப்பார்த்து "நாளை நீங்களும் நம் செட்டியாரைப் போலவே சட்ட மன்றத்து உறுப்பினராக ஆகவேண்டும். அதற்கு வேண்டிய தகுதியும் திறமையும் உங்களிடம் காணுகின்றேன்." என்றார். டாக்டர் அ. சி. செட்டியாரும் அதனை ஆதரித்துக் கூறினார்.

அண்மையில் தமிழய்யா அவர்கள் தமிழ்எழுத்தாளர் சங்கத்தின் 1961ம் ஆண்டின் புதிய தலைவராக ஒருமனதாகத் தேர்ந்து எடுக்கப்பட்டமை கருதிப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் எம். ஏ. வகுப்பு மாணவர்கள் அனைவரும் ஒன்று கூடிப் பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் தலைமையில் தாசப்பிரகாசு ஓட்டலில் விருந்து ஒன்று நடத்தினர். அவ்விருந்தில் கலந்து கொண்டு பாராட்டிப் பேசிய சட்ட மன்ற உறுப்பினர்

திரு. **அன்பழகன்** அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்:- "புதிய தலைவர் அன்பும் அடக்கமும் உடையவர், எல்லோரையும் அணைத்துச் செயலாற்றுவதில் வல்லவர். தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் புதிய தலைவராக ஒருமனதாகத் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கும் செயல் ஒன்றே, அவர் பண்பினை நிறுவிக் காட்டப் போதுமானதாகும். வருங்காலப் தமிழகத்தின் சட்ட மன்றத்தின்-சிறப்பாக மேல் சட்டமன்றத்தின் தலைவராக இருந்து பணியாற்ற வேண்டிய பண்பும் பாங்கும் பெற்றவர். அந்த நிலைக்கு அவர் வருவார் என நம்புகிறேன், விரும்புகிறேன், பாராட்டுகிறேன்."

நான் தமிழய்யாவைப் பத்திரிகை நிருபராகப் பார்க்கவில்லை, கேட்கத்தான் செய்தேன். தமிழய்யாவை நான் 12 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்ப் பேராசிரியராகச் சந்தித்தேன்; ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சென்னைத் தமிழாசிரியர் கழகத்தின் தலைவராகவும், மாநிலத் தமிழாசிரியர் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் ஒரு சேரப் பார்த்து மகிழ்ந்தேன். இன்று தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் புதிய [1961ம் ஆண்டு] தலைவராகக் கண்டு களிப்படைகிறேன்.

தமிழய்யாவுக்கு நல்ல எதிர் காலமும் அதன் மூலம் தமிழ் மொழி, இன வழிகட்கு ஏற்றமும் உண்டாகட்டும் என உள்ளன்போடு வாழ்த்துகின்றேன். வேற்றுமைகளுக்கு இடையே, ஒற்றுமை கண்டு மகிழ்ந்து வரும் தமிழய்யாவைப் பற்றி 1945-ல் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் "வாழ்க்கைக் குறிப்புகள்" என்ற ஆயிரம் பக்கம் கொண்ட தம் நூலில் பொறித்துள்ள உரைகளில் சில தொடர்களை மட்டும் கீழே குறித்து இக்கட்டுரையினை முடிப்பேன்.

பக்கம் 219ல் திரு. வி. க. அவர்கள் எழுதியுள்ளவை:-

"விடுதலையின் சென்னை நிருபரை 1938ல் பார்த்தேன் அவரே வித்வான் அன்பு கணபதி. என் தலைமையில் கூடிய பத்துப் பாட்டு மாநாட்டின் நடைமுறைகளை அன்பு கணபதி செவ்வனே திரட்டி "நவசக்தி"க்கு உதவியதும் அவர்தம் தமிழ் நட்பை என்பால் பெருக்கியது. இவ்வமைப்பு வாய்ந்த ஒரு வித்துவான், சுருக்கெழுத்தைப் பயின்றுபத்திரிகை யுலகில் நுழைவது சிறப்பு. நண்பர் அன்பு கணபதி போதகாசிரியராய்த் தமிழ்த் தொண்டாற்றி வருகிறார். அன்பு கணபதியின் வடிவம் தமிழ் போல் எனக்குத் தோன்றுகிறது. அவர்தம் அமைதியும் புன்முறுவலும், ஆழ்ந்த சிந்தனையும் எவரையும் வயப்படுத்தும், திருவள்ளுவர் அடக்கத்துக்கு அன்பு கணபதியின் வாழ்க்கை ஓரிலக்கியம் என்று கூறுவது மிகையாகாது."

—"திராவிடன்"

# "கெட்ட பழக்கத்தை விட்டதனுல் கிட்டியது நன்மை எனக்கு"

[வே. மருதமுத்து. கண்டி.]

அது எனது பள்ளிப் பருவம். 1953-ம் வருடம். நான் பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும் பொழுது அடிக்கடி எனக்கு பல்வலி ஏற்படுவதுண்டு. இப் பல்வலி தாங்க முடியாமல் எத்தனேயோ வைத்தியம் செய்தும் பயனில்லாமற் போய்விட்டது. மருந்து வைக்கும் அந்த நேரம் மட்டும் தான் பல்வலி நிற்கும். பிறகு வலி வந்துவிடும். இப்படி நான் பல்வலியினுல் அவஸ்தைப்படுவதைக் கண்ட சிலர் என்னேப் புகையிலையைப் பல்வலி உள்ள இடத்தில் வைக்கும்படி சொன்ஞர்கள். அதன்படி செய்தேன். அடிக்கடி மயக்கம் தான் வரும், பல்வலி தீர்ந்தபாடில்லே. பிறகு சுருட்டு புகைக்கும்படி சிலர் என்னே வற்புறுத்தினர். அதன் படியே சுருட்டுப் புகைக்க ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் ஒரு நாளேக்கு ஒரு சுருட்டு மட்டும்தான் புகைத்தேன். பிறகு ஒரு நாளேக்கு இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து வரைக்கும் புகைக்க ஆரம்பித்துவிட்டேன். பல்வலி நின்றுவிட்டது. ஆனுல் சுருட்டுப் பைத்தியம் நிற்கவில்லே! சாப்பாடு இல்லாமல் ஒரு நாள் முழுவதும் இருக்க முடியும். சுருட்டுப் புகைக்காமல் இருக்க முடியாது. எனது அறையில் இருந்து படிக்கும் பொழுது சுருட்டைப் புகைத்துக்கொண்டே படிப்பேன். எனது பெற்ருேருக்கும், மற்றப் பெரியவர்கட்கும் யான் புகைப்பது தெரியாது. புகைப்பதனுல் எனது உதடுகள் கறுத்துக்கொண்டே வந்தன. ஒரு நாள் எனது அன்னேயார், எனது உதடுகள் கறுத்திருப்பதைப் பற்றிக் கேட்டார். நான் உண்மையைக் கூறவில்லே. கடைசியாக, எனது பெற்ருேருக்கு நான் புகைப்பது எப்படியோ தெரிந்துவிட்டது. சுருட்டுப் புகைப்பதை நிறுத்தும்படி என்னேக் கண்டித்தார்கள். எனக்கு நிறுத்த வேண்டும் என்ற ஆசைதான். ஆனுல் பைத்தியம் விடவில்லேயே. ஒருவருக்கும் தெரியாமல் மறைமுகமாக புகைத்துவிடுவேன். எத்தனேயோ முறை சுருட்டுப் புகைப்பதை நிறுத்த முயற்சித்தும் பயன் இல்லே.

1957-ம் வருடம் ஒரு உத்தியோகத்தில் அமர்ந்தேன். இப்பொழுது சொந்தப் பணம் இருப்பதனுல் சுருட்டு, பீடி, சிகரட் முதலியவற்றில் எவை விருப்பமோ அவை யனேத்தும் புகைக்க ஆரம்பித்துவிட்டேன். எனது உடல் நிலே நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டே வந்தது. என்ன செய்வது என்றே தோன்றவில்லே. எனக்கு மூன்று சொத்தைப் பற்கள் இருந்தன. புகைக்காத நேரத்தில் வாய் நாற்றமும் ஏற்படுவதுண்டு.

கடைசியாக, இப்பொழுது ஒரு முடிவுக்கு வந்தேன்! அதாவது, சொத்தைப் பற்களைப் பிடுங்கிவிட்டு, புகைப்பதை நிறுத்தி விடலாம் என்றிருந்தேன். பல் வைத்தியரிடம் சென்று மூன்று முறை மூன்று சொத்தைப் பற்களையும் பிடுங்கிவிட்டேன். அதற்கப்புறமும் புகைப்பதை நிறுத்த முடியவில்லை. இருமலும், நெஞ்சுவலியும் அடிக்கடி வந்துகொண்டே இருக்கும். எனது இளமையான வயதில் உயரமான பாதைகளில் கூட நடக்கவும் முடியாது. இவைகள் யாவும் புகைப்பதனல் ஏற்படும் வியாதியென்று அப்பொழுது நான் சிந்திக்கவே இல்லை. இருமும் பொழுது சளி துப்பினுலும், அதுவும் புகையுடன் தான் வரும்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் எனக்கு ஒரு விடயத்தில் பதினைந்து ரூ நட்டம் ஏற்பட்டுவிட்டது. அதனுல் மிகவும் கவலைப்பட்டேன். அந்தப் பணத்தை மீட்பதற்கு வழி தேடினேன். ஒரு வழியும் தென்பட வில்லை. கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தேன். தேநீர், காப்பி முதலியவை அருந்துவதையும், சுருட்டு சிகரட் புகைப்பதையும், பீடா வெற்றிலை சாப்பிடுவதையும் நிறுத்த வேண்டும் என்று திடப்படுத்திக் கொண்டேன். இவைகளினுல் எனக்கு ஒரு நாளைக்கு அரை ரூ முக்கால் ரூ வரை செலவாகும். ஆகவே இந்தக் கெட்ட பழக்கங்களை ஒழிப்பதற்காக மூன்று நாட்கள் ஒன்றும் சாப்பிடாமல் தண்ணீர் மட்டும் அருந்திக்கொண்டிருந்தேன்.

1959-ம் வருடம் மே மாதம் 21-ம் தேதி எனது வாழ்விலே புனிதமாக கடும்நாள் என்று எனது தினப்புத்தகத்திலும் குறித்துக்கொண்டேன். இந்த நாளிலிருந்து மூன்று நாட்களும் மிகவும் சிரமத்துடன் இருந்தேன். நான்கு, ஐந்து நாட்கள் கழிந்தன. எனது கெட்ட பழக்கங்களும் தொலைந்து விட்டன. தேநீருக்குப் பதிலாகப் பால் அல்லது நெஸ்டோல்ட், ஓவல் முதலியவை இப்பொழுது குடிக்கிறேன். எனக்கு இப்பொழுது எந்த விதமான நோயும் கிடையாது. உடல் நிலை மிகவும் நல்ல நிலையில் இருக்கிறது. முன்பிருந்த எந்த வியாதியும் கிடையாது. புகைப்பதை நிறுத்தியதனுற்ருன் அந்தப் புகைக்கும் நேரத்திற்குப் பதிலாக இக் கட்டுரையையும் எழுத முடிந்தது. முன்பு புகைக்கு செலவிட்ட நேரங்கட்குப் பதிலாக இப்பொழுது எனது நேரங்களைக் கல்விக்காகச் செலவிடுகிறேன்.

இதனுல் வருங்காலத்தில் யான் திடக்காத்திரத்துடனும், முன்னேற்றத்துடனும் வாழ முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

-'நல்வழி'

# இசை ஒலிக்கும் தூண்

கலைப் பொருள்களைத் திரட்டி வைத்திருக்கும் காட்சி சாலைகள் ஒரு நாட்டிற்குப் பெருமை தேடித் தருவன; ஒரு நாட்டின் பண்டைக் கால மக்களின் வாழ்க்கை முறைகளையும் பண்பாடுகளையும் விளக்கிக் கூறும் சான்றுகளாக அமைந்துள்ள பொருள்களெல்லாம், இந்தத்தொல் பொருட்காட்சிசாலைகளில் திரட்டி வைக்கப்படுகின்றன, ஆனால் இப்படி வைக்கப்பட்டுள்ள பொருள்கள் அனைத்தும் எவ்வளவுதான் பண்டைக்காலப் பெருமைகளை விளக்கினலும், அவைகள் ஒளியிழந்து மங்கி மடிந்துபோன பொருள்களாகத்தான் காட்சியளிக்கின்றன.

எத்தனை நூற்றுண்டுகளானலும் உயிரோடு திகழும் கலைச் செல்வங்களைப் படைத்து, நமது பழைய பண்பாடுகளையெல்லாம் இன்றும் நமக்கு எடுத்துக்கூறிக் கொண்டிருக்கும் சிறந்த தொல்பொருட் காட்சி நிலையங்களாகத், திரட்டி ஆலயங்களை அமைத்துஅவற்றை ஆண்டவனுக்கு உடமையாக்கிச் சென்றனர் நமது முன்னேர்கள். இத்தகைய சிறந்த ஆலயங்களில் ஒன்று மதுரை மீனுட்சியம்மன் ஆலயம். அதனுள் இருக்கும் கலைச்செல்வங்கள் எண்ணற்றவை. அவற்றில் ஒன்றுதான் கோபுரவாயிலில்உள்ள கற்தூண். இந்தத் தூணின் சிறப்பு, அதன் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கிளைத் தூணைத் தட்டும்பொழுதும் ஒவ்வொரு விதமான இசை ஒலியை எழுப்புவதாகும். கல்லிலே படைக்கப்பட்டுள்ள இந்த வியத்தகு தூணின் சிறப்பைக் கண்டு, போற்றுபவர்கள் இல்லாமல், இவை ஒரு புறம் ஒதுங்கி நிற்கின்றன. காலத்தின் கோரக் கரங்களால் அழிக்கமுடியாத இந்தக் கலைச்செல்வங்கள், சில வேளைகளில், சில "அன்பர்"களின் அன்புக் கரங்களில் அகப்பட்டுத் தவிப்பதுண்டு. ஒலியை எழுப்புவதற்காகப் பல இடங்களில் கற்களால் இவர்கள் தட்டுவதனுல் இவற்றில் பள்ளங்கள் ஏற்பட்டுவிட்டன.

ஆலயத்தைச் சுற்றிப் பார்த்து வந்த ஒரு வெளிநாட்டு நண்பர் இந்தத் தூணின் சிறப்பைக் கண்டார். இவை ஏன் இப்படி அனுதையாக, கவனிக்கப்படாமல் கிடக்கின்றன என வியந்தார். உண்மைதான். இத்தூணை நன்கு பாதுகாத்து, அதற்குச் சேதமில்லாது அதிலிருந்து எழும் ஓசையைக் கேட்பதற்கும் வசதி செய்து வைத்தால், இக்கோவிலின் சிறப்பைக் காணவரும் பயணிகளின் உள்ளத்தைக் கவரும் சிறந்த சாதனங்களில் இதுவும் ஒன்ருகத் திகழும்.

—"தமிழ்நாடு"

---:o:---

# சென்னை மாநிலத்தில் பள்ளிகள்

—x—

## முந்திய ஆண்டை விட அதிகரிப்பு

—x—

## 58-59—ஆண்டு விவரம்.

கல்வியைப் பரப்புவதில் முந்திய ஆண்டுகளின் முன்னேற்றம், 1958—59-லும் தொடர்ந்து நிலை நிறுத்தப்பட்டது. 500-ம் அதற்கு மேலும் மக்கள் தொகை உள்ள 12115 கிராமங்களில், 10 கிராமங்களில் மட்டுமே இந்த ஆண்டின் இறுதியில் பள்ளி இல்லாமலிருந்தது.

### ஆதாரப்பள்ளி

இந்த ஆண்டில் 237 ஆரம்பப் பள்ளிகள் ஆதாரப் பள்ளிகளாக மாற்றப்பட்டன. ஆதாரப் பள்ளிகள் உள்பட மொத்த ஆரம்பப் பள்ளிகளின் தொகை 23853-லிருந்து 25082 ஆக அதிகரித்தது. எல்லா ஆரம்பப் பள்ளிகளிலுமாக மாணவர்கள் தொகை 2883461-லிருந்து 2981301 ஆக அதிகரித்தது. 6 முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகளில் பள்ளி செல்லும் குழந்தைகள் தொகை சுமார் 70.3 சதவிகிதம். சீரமைக்கப்பட்ட ஏழு ஆண்டு ஆரம்பக் கல்வி சம்பந்தமான புதிய பாடத் திட்டம் இந்த ஆண்டில் 1-லிருந்து 4-ஆம் வகுப்பு வரை அமுலாக்கப்பட்டது.

### உயர் நிலைப்பள்ளிகள்

உயர் நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை 1157-லிருந்து 1174 ஆக அதிகரித்தது. உயர் நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் தொகை 1957-58-ல் 583081 ஆக இருந்ததானது, 1958-59-ல் 622549 ஆக அதிகரித்தது. கலைக்கல்லூரிகள் எண்ணிக்கை முந்தின ஆண்டில் இருந்த அளவே நீடித்தது (ஆண்களுக்கு 4?; பெண்களுக்கு 16) மாநிலத்தில் இஞ்சினீரிங் கல்லூரிகள் தொகை 6-லிருந்து 7 ஆகியது.

### அதிகரிப்பு

1957-58-ல் மொத்தம் 14 சாதாரணப் பயிற்சிப் பள்ளிகள் இருந்தன. இந்த ஆண்டில் அவற்றில் 7 பள்ளிகள் ஆதாரக் கல்வி முறைக்கு மாற்றப்பட்டன. இதன் விளைவாக ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளிகள் தொகை 9?-லிருந்து 105 ஆக அதிகரித்தது.

சென்னை குழந்தைகள் நூல் நிலையத்தில் உறுப்பினர்கள் தொகை 375-லிருந்து 214 ஆகக் குறைந்தது.

## கல்வித் துறையிலும் தேர்தல் கண்ணோட்டமா?

—*—

### கல்வி அமைச்சரின் கான்பூர் பேச்சுபற்றித் 'தினமணி' இதழின் கருத்துரை

—*—

கான்பூரில் நடைபெற்ற அகில இந்தியக் கல்வி மாநாட்டில் சென்னை கல்வி மந்திரி திரு. சி. சுப்பிரமணியம் செய்துள்ள தலைமைப் பேச்சை அவரே நாலைந்து தடவை திரும்பப் படிக்கவேண்டுமென்று விரும்புகிறோம். பல்கலைக் கழகங்களின் தரம்குறைந்து விட்டது என்று மற்றவர்கள் சொன்னால், அதற்கு ஏதாவது உள் நோக்கம் கற்பிப்பது ஒரு புது ரகமாயிருந்து வருகிறது.

### பற்று இல்லை

கல்வித் துறையில் சர்க்கார் செய்யும் சில மாறுதல்கள் 'அவசரப்பட்டவை' என்று மற்றவர்கள் சொன்னால், 'பழைய தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்குப் புதிய தலைமுறையின் தேவைகள் புரியமுடியாது'' என்று சுலபமாகப் பைசல்செய்துவிடப் பார்க்கிறார்கள். போதனை மொழி பற்றி யாராவது மாற்று அபிப்பிராயம் சொன்னால், அவர்களுக்குத் தாய் மொழிப் பற்று இல்லை என்று பேசிவிடுகிறார்கள்.

### தானே படிக்கவும்

நாட்டுப் பற்றும் தாய் மொழிப் பற்றும்தமக்குத்தான் உண்டு, மற்றவர்களெல்லாம் குறுகிய நோக்கமுடையவர்கள் என்ற அகம்பாவத்தினால் அவர்கள் அப்படிப் பேசவில்லை. உண்மையாக அந்த அகம்பாவம் அவர்களுக்கு இருந்தால், நாம் ஆட்சேபிக்கமாட்டோம். தாம் நன்றாகச் சிந்தித்து முடிவு செய்யாத ஒன்றை—தமக்கே நிச்சயமாக இல்லாத ஒன்றைக் கேவலம் ஓட்டுவாங்குவதற்காக அவர்கள் வற்புறுத்திப் பேசும்போது அவர்களுடைய வேடத்தைக் கிழித்தெறிய வேண்டுமென்ற ஆத்திரமேற்படுவது இயற்கையே. அதனால்தான் கல்வி மந்திரி தன்னுடைய கான்பூர் பிரசங்கத்தைத் தானே திருப்பிப் படிக்க வேண்டுமென்று கோருகிறோம்.

### குட்டிச் சுவர்

ஆங்கிலத்தைப் புறக்கணிப்பது எதிர்கால சந்ததிகளின் வாய்ப்புகளுக்கு உலைவைப்பதாகுமென்று கல்வித் துறையில் நல்ல அனுபவமுள்ளவர்கள் பல தடவை எச்சரித்திருக்கிறார்கள். ஆனால் தேசத்தின் கௌரவம்—நாட்டு மொழியின் உயர்வு என்ற சம்பந்தமில்லாத உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, கல்வியின் அமைப்பையே குட்டிச் சுவராக்குவதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ, அவ்வளவையும் செய்தார்கள்; செய்துகொண்டிருக்கிறார்கள்.

### எப்படி?

இதைச் செய்தவர்களே இன்று வந்து, ''சர்வ கலாசாலைக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குத் தீவிர முயற்சிகள் செய்யவேண்டுமென்று'' கேட்கும்போது, அவர்கள் தாமாகவே தம்முடைய வேடங்களைக் கலைத்துக் கொள்கிறார்கள். ஆரம்பக் கல்வி, செகண்டரி கல்வி கட்டங்களில் பலமான அஸ்திவாரம் போடவேண்டுமென்று திரு. சுப்பிரமணியம் கூறுகிறார். அகர வரிசை கற்றுக் கொள்ளுவதற்குக் குழந்தைகள் பள்ளிக்கு வரும் பருவத்திலிருந்து குறுகிய ஒற்றையடிப் பாதையில் அவர்களைத் தயார் செய்துவிட்டால், மேல்படிப்பு கட்டத்தில் அவர்கள் பரந்த நோக்கம் கொண்டவர்களாயிருப்பார்களென்று கல்வி மந்திரி எப்படி எதிர்பார்க்கிறார்?

## ஓட்டு

கல்வி உட்பட எந்தத் துறையிலும், வோட்டுப் பிடிக்கும் கண்ணோட்டத்துடனேயே காரியங்கள் செய்வது எதிர்கால சந்ததிகளுக்கு நாம் நன்மை செய்வதாகுமா என்பதை எப்போதாவது சிந்திக்கிறார்களா ?

## மாற்றாந் தாய்

சில நாட்களுக்கு முன்பு திரு. சுப்பிரமணியம் சென்னையில் தலைமை ஆசிரியர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் அவசரப்பட்டு 'இண்டர்மீடியட்' வகுப்புகளை எடுத்தது தவறு தானென்பதை ஒப்புக்கொண்டார். ஆங்கிலத்திலும், அதே தவறு தான் செய்யப்பட்டிருக்கிறது. இஞ்சினீயர்கள், டாக்டர்கள், தொழில் துறை நுட்ப நிபுணர்களே இன்று நாட்டின் தேவை என்றால், அதற்கு அஸ்திவாரம் பலமாயிருக்கிறதா? செகண்டரி கட்டம் முடியும் வரையில், ஆங்கிலம் மாற்றாந்தாயின் பிள்ளையைப்போல் போதிக்கப்படுகிறது.

## கண்ணைக் கட்டி

இந்தப் படிப்பை முடித்துக் கொண்டு, அவர்கள் நுட்பக கல்லூரிகளில் சேரும்போது, போதனை பூராவும் ஆங்கிலத்தில் இருக்கிறது. இதனால் மாணவர்கள் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல் தவிக்கிறார்கள். பாடங்களை அவர்கள் எந்த அளவுக்குப் புரிந்து கொள்ள முடியும்? இந்த லட்சணத்தில் பட்டம் பெறுபவர்களின் யோக்கியதையும் அத்தத் தகுந்தாற் போல்தானிருக்கும்.

## வளர்ச்சி இல்லை

"பல்கலைக் கழகங்களில் ஆங்கிலத்திற்குப் பதிலாக உபயோகிக்கக் கூடிய அளவுக்குப் பிரதேச மொழிகள் போதிய அளவு வளர்ச்சி பெறவில்லை யென்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். போதிய அளவு பாடபுத்தகங்களும், மற்ற புத்தகங்களும் பிரதேச மொழிகளில் இல்லை" என்று திரு. சுப்பிரமண்யம் கூறுகிறார். அவசரப்பட்டுக் கல்லூரிகளில்போதனா மொழியை மாற்றக்கூடா தென்பதற்கு எல்லோரும் இந்தக் காரணத்தைத்தான் சொன்னார்கள். கோவை கல்லூரியில் பி. ஏ.பட்டப்படிப்புக்குத் தமிழ் போதனா மொழி யாக்கப்பட்டிருப்பது பற்றியும் திரு சுப்பிரமணியம் குறிப்பிட்டிருக்கிறார்.

## கோவையில்

"1963-64 முதல் சென்னை ராஜ்யத்தில் பி. ஏ. பட்டப்படிப்பிற்கு ஆங்கிலத்திற்குப் பதிலாகத் தமிழ் போதனா மொழியாயிருக்கும். ஆயினும், அப்போதும்கூட ஆங்கிலம் ஒரு பாடமாகப் போதிக்கப்படும். இந்தத் திட்டம் எவ்வளவு தூரம் வெற்றிகரமாக நடக்கும் என்றுபார்ப்பதற்காக 1960-61 கோவையிலுள்ள சர்க்கார் கல்லூரியில் பி. ஏ பட்டப் படிப்புக்குத் தமிழில். போதனா மொழி பரீட்சார்த்தமாக அமுலுக்குக் கொண்டு வரப்படுகிறது" என்று கல்வி மந்திரி கூறியிருக்கிறார். கோவையிலுள்ள திட்டம் பரீட்சார்த்தமானது என்பதை அவர் இப்போது தான் முதன் முதலாக ஒப்புக் கொள்ளுகிறாரென்று நினைக்கிறோம்.

## மனக் குழப்பம்

அப்படியானால், 1963-64 முதல் ராஜ்யம் பூராவிலும் பி, ஏ. பட்டப் படிப்புக்குத் தமிழ் போதனா மொழி யாக்கப்படுமென்பது முடிவான விஷயமா, அல்லது கோவை பரீட்சையின் பலனைப் பார்த்துத்தான் முடிவு செய்யப் போகிறார்களா ? கல்வித் துறையில் அரசியல்வாதிகளுக்கு எவ்வளவு மனக் குழப்பம் இருக்கிறதென்பதையே இந்த கான்பூர் பேச்சு பிரதிபலிக்கிறது. அதுவும் நல்லதுதான். மனம் விட்டுப் பேசினால்தான் பிரசனைகளுக்குத் தீர்வு காண முடியும். அரசியல்வாதிகள் தம்முடைய தவறுகளையும், சந்தேகங்களையும் இப்படி பகிரங்கமாக விவாதிப்பது வரவேற்கத்தக்கதே.

(பக்கம் 29 பார்க்க)

# ஆரம்ப ஆசிரியர்களைக் கண்டு அமைச்சர்கள் அஞ்சுகிறார்கள்!

—x—

## ஆசிரியர் மாநாட்டில் ஆளுவோர் கலக்காததேன்?

—x—

## நாமக்கல் வட்டத்தில்

### அன்பழகன் பேச்சு

"ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் எப்போது அரசியல் பேசுகிறார்? பசி அவருடைய வயிற்றைக் கிள்ளும்போது! பட்டினி அவரது குடும்பத்தை வாட்டுகின்றபோது! அவர்களுக்கு ஏற்படுகின்ற குறைகளை மாநாடுகள் போட்டு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்போருக்கு எடுத்துக் கூறுகின்ற நேரத்தில் 'ஆரம்ப ஆசிரியர் அரசியல் பேசுகின்றார்' என்று ஆளவந்தார்கள் அதிர்ச்சியடைகிறார்கள்."

இவ்வாறு நாமக்கல் வட்டத் துவக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி 5-வது மாநாடு சேந்தமங்கலத்தில் நடைபெற்றபோது, உரையாற்றிய பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

நாமக்கல் வடடத் துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் மாநாடு சேந்தமங்கலத்தில் நடைபெற்றது. மாநாட்டிற்கு அருண்மொழி பி. ஒ. எல். அவர்கள் தலைமை தாங்கினார்கள். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்கின்ற குறைபாடுகள் பற்றியும் ஆதாரக் கல்வித் திட்டத்திலே இருக்கின்ற கோணல்கள் குறித்தும் சட்ட மன்ற உறுப்பினர் கல்யாணசுந்தரம் அவர்களும், மற்றும் பலரும் பேசினார்கள். இறுதியாகப் பேராசிரியர் க. அன்பழகன் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்படுகிறது:

#### ஆளுங் கட்சியினர்

இத்தகையதோர் மாநாட்டிடிலே கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றதற்குப் பெரிதும் மகிழ்கிறேன். இந்த மாநாட்டில் எதிர்க்கட்சியைச் சார்ந்த நானும், நண்பர் கல்யாணசுந்தரமும், தோழியர் அருண்மொழி அவர்களும் கலந்து கொள்ளுகின்ற காரணத்தால் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களில் ஒருவர்கூட கலந்து கொள்ள மறுத்து விட்டார்களாம், அதற்காக நான் பரிதாபப்படுகிறேன். அனுதாபமும் கொள்கிறேன். அனுதாபம் அடையக் காரணம், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள மறுத்தவர்கள் ஒருவேளை ஆரம்பப் பள்ளியிலேயே நுழையாதவர்களோ என்பதற்காகத்தான். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் தங்களுக்கு நேர்ந்திருக்கின்ற குறைபாடுகளை—நியாயமான கோரிக்கைகளை இது போன்ற மாநாடுகள் மூலமாக ஆட்சியாளர்களுக்கு

எடுத்துச்சொல்லி விளக்குகின்ற நேரத்தில் 'ஆரம்பப்பள்ளி ஆசிரியன்கூட அரசியல்பேச ஆரம்பித்து விட்டானே' என்று ஆளவந்தார்கள் அதிர்ச்சி அடைகிருர்கள் — அங்கலாய்க்கிருர்கள்.

## கட்சியில்

உள்ளபடியே நான் இது போன்ற ஆசிரியர்கள் மாநாடுகளிலே கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், "ஆசிரியநண்பர்களே! நீங்கள், அரசியல் கட்சிப் போராட்டங்களிலே ஈடுபட்டு அழிந்து விடாதீர்கள். அரசியல் கட்சிகள் விரிக்கும் வலையிலே வீழ்ந்து உங்கள் வாழ்வைப் பாழாக்கிக் கொள்ளாதீர்கள்" என்ற கருத்தைத்தான் எடுத்துச் சொல்வேன்

## அரசியல்

மனிதனுகப் பிறந்த எவரிடமிருந்தும் அரசியலைப் பிரிக்க முடியாது. அரசியல் கண்ணேட்டம் இல்லாத மனிதனே கிடையாது. ஆரம்ப ஆசிரியனும் மனிதனே வேண்டுமானுல் ஓர் ஆரம்ப ஆசிரியன் அரசியல் கட்சிகளில் நேரடியாக ஈடுபாடு கொள்ளாமல் இருக்க முடியுமே தவிர,அரசியலைப்பற்றி அறிந்து கொள்ளாமல் இருக்கமுடியுமா? காங்கோவில் ஏற்படுகின்ற அரசியல் கொந்தளிப்பு, லாவோசிலே இன்றையதினம் இருக்கின்ற நிலைமை, நேபாள மன்னர் குடி அரசை ஒழித்து மீண்டும் முடி அரசாக மாற்றிக் கொண்டிருக்கிற சம்பவம், இவைகளை அறியாமல் எப்படி ஒரு மனிதன் இருக்க முடியும்? அதுவும் பத்திரிக்கை படிக்கின்ற ஆசிரியர் அரசியல் கண்ணேட்டம் இல்லாதவராக எப்படி இருக்க முடியும்?

## எதிர்க் கட்சி பத்திரிகை

எதிர்க்கட்சிப் பத்திரிகை ஓர் ஆசிரியர் கையிலே இருப்பதைப் பார்த்து விட்டால் இங்கே இருக்கின்ற காங்கிரசுக்காரர் உடனே இந்த ஆசிரியர் எதிர்க்கட்சிப் பிரசாரம் செய்கிருர் என்று மேல் அதிகாரிக்குப் புகார் செய்கிருர். இந்த ஆசிரியர் தேர்தலிலே இந்தக் கட்சிக்குப் பிரச்சாரம் செய்தார்,சர்க்காரைத் திட்டினுர் என்றெல்லாம் புகார் கிளப்பி விடுகிருர். உடனே ஆசிரியர்களுக்கு மேலாளராக உள்ள 'டி. இ. ஓ.' வோ அல்லது டிவிஷனல் இன்ஸ்பெக்டரோ விசாரணைக்கு வந்துவிடுகிருர். "என்னையா உன்மீது இப்படிப்புகார் வந்திருக்கிறது. என்ன சமாதானம் சொல்லுகிருய்?" என்று அதிகாரி கேட்கும்போது, ஆரம்ப ஆசிரியர் அலறிப் புடைத்து,'ஐயோ! அப்படியெல்லாம் நான் செய்யவில்லை. இது யாரோ என்மீது விரோதம் உள்ளவர்கள் இப்படிச் செய்து விட்டார்கள்' என்று கூறுகிருர் 'எலக்ஷனிலே பிரச்சாரம் செய்தாயாமே' என்கிருர். அதிகாரி. 'ஐயோ! நான் எலக்ஷனிலே சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஏஜன்டாகவல்லவா இருந்தேன்' என்கிருர் ஆசிரியர். எப்படியோ ஒரு வழியாக விசாரணை முடிந்ததும் வீடு செல்லும் அதிகாரி வீட்டிலே என்ன காண்கிருர்? அதிகாரியின் துணைவியார் எதிர்க்கட்சிப் பத்திரிகையை வைத்துப் படித்துக் கொண்டு இருக்கிருர். 'இந்தப் பத்திரிகையெல்லாம் இங்கே எப்படி வந்தது' என்று கேட்கிருர் அதிகாரி. அம்மையார் "உங்களுக்குத் தெரியாதா? நமது பெரிய பையன் படிப்பதே நாள்தோறும் இந்தப்

பத்திரிகைதானே ! நானும் படித்தேன்; அதிலே பல மறுக்கமுடியாத உண்மைகள் சொல்லப்பட்டு இருக்கின்றன. வேண்டுமானால் நீங்களே படித்துப் பாருங்கள் !' என்று அவரிடமே அந்தப் பத்திரிகையைத் தருகிறார் அவரது துணைவியார். இப்படி அதிகாரியின் துணைவியும் மகனும் மட்டுமல்ல, அமைச்சர்கள் வீட்டுப் பிள்ளைகள்கூட எதிர்க்கட்சிப் பத்திரிகைகளைத்தான் விரும்பிப் படிக்கிறார்கள்.

## எந்த நாடு?

நிலைமை இப்படி இருக்கும்போது ஆசிரியர்களைக் குறைகூறி என்ன பயன் ? அண்மையிலே இங்கிலாந்து சென்று திரும்பிய அமைச்சர் சுப்பிரமணியம் அந்த நாட்டுக் கல்வியின் தரத்தைக் கண்டு வானளாவப் புகழ்ந்திருக்கிறார். அங்கே படிக்கின்ற ஆறு வயதுக் குழந்தையைப் பார்தது தேசப்படத்தைக் காட்டி 'இது எந்த நாடு?' என்று கேட்டால் 'இது காந்தி நாடு' என்கிறதாம். ஒரு குழந்தை 'இது நேருவின் நாடு' என்கிறதாம். இன்னொரு குழந்தை, 'இது இந்தியா' என்று செப்புகிறதாம்.

அந்த நாட்டுக் கல்வியின் தரத்தைப் பார்த்து வியந்த அமைச்சர் நம் நாட்டுக் கல்வித்துறையின் தரங் குறைந்திருப்பது கண்டு ஆரம்ப ஆசிரியர்கள்மீது பாய்கிறார்.

## கல்வியின் தரம்

கல்வியின் தரம் எப்படி அமையும்? அமைச்சரே கூறுகிறார். இங்கிலாந்திலே ஒரு பள்ளிக்கூடத்தை ஆறு இலட்ச ரூபாய் செலவிலே அமைத்து இருக்கிறார்கள்—ஒரு கல்லூரிக் கட்டிடத்திற்கு ஆறுகோடி ரூபாய் செலவழித்து இருக்கிறார்கள் என்று. இங்கே சென்னையிலே இருக்கின்ற கார்ப்பரேஷன் பள்ளிக்கூடம் ஒன்று 30 ஆண்டுகளாக வாடகைக் கட்டிடத்திலே நடைபெற்றுவருகின்றது. கட்டிடத்தின் சுவர்கள் பழுதடைந்து, கொஞ்சம் பலசாலியான பிள்ளைகள் நாலைந்து பேர் சாய்ந்து உட்கார்ந்தால் விழுந்து விடுகின்ற நிலையிலே இருக்கின்றது. மரத்தடியிலே வகுப்பை நடத்துகின்றார்கள். தெருவிலே செல்கின்ற காரும் சைக்கிளும் குழந்தைகளின் கவனத்தைக் கவருகின்றன. பாடம் எப்படி ஏறும் ? இந்த சூழ்நிலையில் ஆரம்ப ஆசிரியன் எப்படிக் கல்வின் தரத்தை உயர்த்த முடியும்? ஆசிரியர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யவில்லை, அதனால் கல்வியின் தரம் உயரவில்லை என்ற அமைச்சரின் குற்றச்சாட்டு எப்படிப் பொருந்தும்? தரக் குறைவுக்குக் காரணம் சூழ்நிலை என்று சொல்லட்டும், நல்ல சூழ்நிலை அமையத்தேவையான பணம் இல்லையென்ற பஞ்சப் பாட்டை அமைச்சர் பாடட்டும். ஆசிரியர்களைக் குறை கூறுவதனால் பயன் என்ன ?

## கேலிக்கூத்து

மதிய உணவுத் திட்டம் என்ற ஒன்றைப் போட்டு ஆசிரியர்களை ஊரிலே உண்டி குலுக்கச் சொல்கிறார்கள். இதன் விளைவு என்ன? சேலத்திலே ஓர் ஆசிரியை தகாத நபரிடம் நன்கொடை வேண்டிய காரணத்தால் அவமானத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். பள்ளிச் சீரமைப்புத் திட்டமும் பல இடங்களில் கேலிக்கூத்தாக முடிந்திருக்கிறது. இப்படிக் குற்றம் முழுவதையும் ஆட்சிப் பீடத்திலே இருப்போரே புரிந்துவிட்டு ஆரம்ப ஆசிரியர்களைக் குறை கூறுவதில் அர்த்தம் இல்லை என்று கூறி ஆரம்ப ஆசிரியர்களின் குறைகளைக் களைய, என்னாலான உதவிகளைச் செய்வேன் என்று கூறிக்கொள்கிறேன் என்றார் அவர்.

'தனி அரசு'

# மேல்சபையில் ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும்! ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகை வேண்டும்! ஆசிரியர்கள் கூட்டணி தீர்மானம்!

அண்மையில் நடைபெற்ற நாமக்கல் வட்டத் துவக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி 5-வது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் .—

நகர சபை ஆசிரியர்களுக்குப் கொடுப்பதுபோல் எல்லா ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி கொடுக்க வேண்டுமாய் இம்மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வுகால ஊதியத்துடன் பஞ்சப்படியும் சேர்த்துக் கொடுக்கவேண்டுமாய் இம்மாநாடு அரசினரைக் கேட்டுக்கொள்கிறது.

இலவசமாய்ப் புதிய பாடதிட்டம் அச்சிட்டு எல்லாப் பள்ளிகட்கும் வழங்குமாறு அரசினரை இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

ஆசிரியைகளுக்குக் கொடுக்கப்படும் பிரசவகால விடுமுறையை மூன்றுமாத காலமாக உயர்த்திக் கொடுக்குமாறு இம் மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

ஆசிரியர்களின் குழந்தைகளுக்குக்கல்லூரிவரை இலவசக் கல்வியும் இலவசப் புத்தகங்களும் அளிக்குமாறும் இம்மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து அறுபதாக உயர்த்துமாறு இம் மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

கொல்லிமலையில் பணியாற்றும் எல்லா ஆசிரியர்களுக்கும் மலைப்படி கொடுத்துவந்தது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இதனை மீண்டும் தொடர்ந்து கொடுக்குமாறு இம் மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

1962-ல் நடைபெற விருக்கும் பொதுத் தேர்தலில் என். ஜி. ஓ.க்களுக்கு கொடுப்பதைப் போலவே ஆசிரியர்களுக்கும் பிரயாணப்படியும் தினசரிப்படியும் அளிக்குமாறு இம் மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

இப்போது அமுலில் இருக்கின்ற ஆதாரக் கல்வி முறையால் துவக்கக் கல்வியின் தரம் உயர முடியாது என இம்மாநாடு கருதுவதால் இத் திட்டத்தைப் புனர் பரிசீலனை செய்யுமாறு இம் மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

அரசியலாரே மதிய உணவுக்கான முழுச் செலவையும் ஏற்றுக் கொள்ளுமாறு இம் மாநாடு அரசினரைக் கேட்டுக்கொள்கிறது.

அரசாங்கத்தின் கடைநிலை ஊழியர்களுக்குக் கல்வி—இலவச வைத்திய வசதிகள் யாவும் மாவட்ட மன்றப் பள்ளிகளில் வேலைசெய்யும் கடைநிலை ஊழியர்களுக்கும் கொடுக்கும்படி இம் மாநாடு அரசினரைக் கேட்டுக்கொள்கிறது.

சென்னை மேலவையில் ஆசிரியர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் நியாயமான பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்று இம் மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

பன்னெடுங்காலமாக ஆசிரியர்களிடையே இருந்த ஊதிய வேறுபாட்டுக்குறையினை நீக்கி எல்லா ஆசிரியர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தியமைக்கு இம் மாநாடு தனது உளம் கனிந்த நன்றியினையும்பாராட்டுதலையும் அரசினருக்குத் தெரிவித்துக் கொள்வதுடன் உயர்ந்துவரும் விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்த ஆவன செய்யுமாறு இம்மாநாடு பணிவுடன் கேட்டுக் கொள்கிறது.

# பின்லாந்து நாட்டுப் பழமொழிகள்

தொகுத்தவர் : அன்புப் பழம்நீ.

விழிப்புக் கொள்ளும் மனிதனின் இன்பக் கனவுதான் நம்பிக்கை.

* * *

குதிரையின் தோள்மீது அமர்ந்து சவாரி செய் ; கழுதை, கோவேறு கழுதை இவற்றின் வால்புறத்தில் உட்கார்ந்து சவாரி செய்.

* * *

பெண்மணியும், பனிக்கட்டியும் உருகும் பொருள்கள்.

* * *

கோபமும் ஓநாயும் கூடப் பிறந்தவை.

* * *

எந்த வீட்டில் சேவலைவிடப் பெட்டைக் கோழி உரக்கக் கூவுகிறதோ அந்த வீட்டில் என்றும் அமைதியே கிடையாது.

* * *

உரிய காலத்திற்குப் பிறகு அறுவடை நடந்தால் கிடைக்கும் தானியமும் குறைவாகத்தான் இருக்கும்.

* * *

வேண்டா வெறுப்புடன் பரிமாறப் படும் பால் சோற்றைவிடப் பரிவும் குழைவும் அன்பும் கலந்து பரிமாறப்படும் பழைய சோற்றுக்குத்தான் சுவை மிகுதி.

* * *

சோம்பேறி ஓநாய்கள் குரைத்துக் குரைத்து ஆடுகளை அலைக்கழிக்கின்றன. ஆனால் சுறுசுறுப்புள்ள ஓநாய்களோ சந்தடியின்றி ஆடுகளை ஏப்பமிட்டு விடுகின்றன.

* * *

பித்துப் பிடித்த மூளைதான் பேயின் அலுவலகம்.

* * *

தேங்கும் குட்டைதான் பாசி பிடிக்கும்; வீட்டுக்குள்ளேயே இருக்கும் கணவன்தான் வெறுக்கப்படுவான்.

மகிழ்ச்சியை அனைவருக்கும் அறிவி; துயரங்களை ஒளித்து வை. அப்போதுதான் உலகம் உன்னைப் பாராட்டும்.

* * *

ஒரு பெண்ணை மணம் புரிய வரும் கணவனும், பாயசத்தைக் குடிக்க வரும் நாயும், தமக்குப் போட்டியாக வருகிறவர்களைத் தைரியமாகத் தாக்குவார்கள்.

* * *

வழக்கறிஞர்களின் வீடுகளுக்கு முட்டாள்களின் தலைகள்தான் கடைகால் !

* * *

சோம்பேறித்தனம் மெதுவாக ஊர்ந்து செல்லுகிறது. அதைப் பின்பற்றும் வறுமை நாலுகால் பாய்ச்சலில் ஓடோடி வருகிறது.

* * *

எல்லா மனிதர்களும் படித்தவர்களாயிருந்தால் உலகம் எப்போதோ அழிந்துபோயிருக்கும்.

* * *

சிறையில் இருந்து கொண்டு அறுசுவை உணவு அருந்துவதை விட, கூரைக் குடிசையில் இருந்து கொண்டு கூழ்குடித்துவாழ்வதுமேல்

* * *

கட்டிவைக்கப்பட்டிருக்கும் கழுதைக்குக் கள்ளநினைவு எப்போதும் இருந்துகொண்டுதானிருக்கும்.

* * *

பிறக்கும்போது அழுகை; வாழ்க்கை முற்றும் முனகல் ; சாவில் வெறும் ஏமாற்றம் இம் மூன்றும் தான் மனிதன் பூமியில் கண்ட இன்பம்.

* * *

உளறுவாயனை வேலைக்கமர்த்துவதைவிட ஊமையை அமர்த்திக் கொள்வது மேல்.

# தமிழர் திருநாள்

வித்துவான் அ. திருஞான சம்பந்தம்

தமிழர்கள் இயற்கையுணர்வினர். இயற்கையைப் போற்றும் பண்பு அவர்கள் இளஞ் செங்குருதியிலேயே தோன்றியது.

"திங்களைப் போற்றுதும்
திங்களைப் போற்றுதும்"
"ஞாயிறு போற்றுதும்
ஞாயிறு போற்றுதும்"
"மாமழை போற்றுதும்
மாமழை போற்றுதும்"

என இளங்கோவடிகள் இயற்கையைப்போற்றிச் சிலப்பதிகாரத்தைத் தொடங்குகிறார். இத்தகை இறையைப் போற்றி வழிபாடு செய்யும் திருநாள் தைத் திருநாளாம் தமிழர் திருநாளாகும். இத்திருநாளைப் பற்றி இன்று நம்மவர்களிடையே பல கருத்துகள் உள. அவைகள் யாவை?

"உழைப்பின் உயர்வையும் சக்தியையும் குறிப்பிடுவதே தமிழர் திருநாள். அந்த உழைப்பே நாட்டின் நிலையை உயர்த்த வல்லது. உழைப்பால் உயரலாம் என்ற தத்துவத்தின் அடிப்படையே தமிழர் திருநாள்" என்பது ஒரு சாரார் கருத்து.

"தமிழர்களுக்குரிய திருநாளாக ஒன்றைக் காண்பது அரிது. கலாசாரத் துறையில் தமிழனை ஆதிக்கம் கொண்டவர்கள் தங்கள் ஆசாரத்தைப் புகுத்தும் பாணியில் தமிழர் கலாசாரங்களை அழித்ததோடன்றித் தமிழனது வரலாற்றையும் அழித்தனர். எனவே தமிழனுக்குக் கடவுள், சமயம், சமய நூல், வரலாற்றுச் சுவடி, இலக்கியம் முதலியவை எவை என்று சொல்லக் கடினமாயுள்ளது. இந்நிலையில் தமிழர் திருநாள் என்பதை அறுவடைத் திருவிழா என்ற கருத்தில் கொண்டாடுவதே நல்லது" என்பது மற்றுமோர் சாரார் கருத்து.

"கையே தலையணையாய், தரையே பஞ்சணையாய், வானமே போர்வையாய் வாடி, வறுமை, அறியாமை, பிணி, கடன் முதலியவைகளால் கட்டுண்டு நலியும் உழவர், தங்கள் உழைப்பின் முழுப்பயனையும்காணும் இந்நாளிலே தமிழரின் பெருவாழ்வுக்கான முறைகளைக் கூடிக்கலந்து பேசி குறைமதியினைக் களைந்திட்டு உழைத்து உறுபயன் பெறுவதற்கான நன்னாளாகக் கொண்டாட வேண்டும். இதுவே இத் தமிழர் திருநாள் கொண்டாடுவதன் நோக்கம்" என்பது மற்றுமோர் சாரார் கொள்கை.

"இப்பொழுது வழக்கிலிருக்கும் தமிழாண்டின் முதல் மாதம் சித்திரை என்பது. இப்பொழுதுள்ள தமிழ் மாதங்கள் வடசொற்களிலிருந்து வந்தவை. (உதாரணம்) சைத்திரம் – சித்திரை, வைகாசம் – வைகாசி. பல்குணம்-பங்குனி. ஆனால் தமிழ் வணிகர் தை மாத முதல் நாளிலிருந்துதான் தம் கணக்கைத் தொடங்குவர். அப் பழங்குடி மக்கள் இன்றும் தை மாத முதல் நாளே ஆண்டின் தொடக்கம் என்பர். "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது நாமறிந்த பழமொழி. தமிழர் உயிர் நாடியான பயிர்த்தொழிலின் பயனை நுகரும் நாள் அது. எனவே தமிழர் தம் ஆண்டுத் தொடக்கமான — பயிர்த்தொழிலில் பயன்காணும் நாளான தைமாத முதல் நாளில் பாற்பொங்கலிட்டு மகிழ்ந்து தமிழர் திருநாளைக் கொண்டாடுகின்றனர் என்பது ஆய்வாளர்கள் கூற்று.

"வீண் வாதங்களைவிட்டு நரக மான இப்பூவுலக வாழ்வைச் சீர் படுத்த நாம் இத்திருநாளைக்கொண் டாடவேண்டும்" என்பது மற்று மோர் கொள்கை.

"மகர சங்கிரமே சக்தி என்னும் சக்தியானவள் ஆடித்திங்கள் முதல் மார்கழித்திங்கள் வரைக்கும் தக்கண அயநம் முழுவதும் மக்களுக்கு மூதேவி வடிவமாயும் பசுக்களுக்குப் புலி வடிவமாயும் பிடித்துக் கொண் டிருந்தாள். அந்தப் பீடை நீங்கி மனிதர் நலம் அடையும் பொருட்டு தைத்திங்கள் முதல் நாளான மகர சங்கிராந்தி உத்திர அயந புண்ணிய நாளில் சூரியதேவர், பிரும்மா, விஷ்ணு, உருத்திரன், சதாசிவன், மகேசுவரன் முதலிய தேவர்களைப் பூஜித்து பாற்பொங்கல் செய்து படைப்பர்?" என்று அமிசுமான் என் னும் ஆகமம் தமிழர் திருநாளைப் பற்றிக் கூறுகிறது.

இனி "தமிழர் இயற்கையுணர்வே தமிழர் திருநாளுக்குக் காரணம்" என்ற எனது கருத்து பற்றிக் கூறு கிறேன்.

உலகில் முதன் முதலில் மனிதன் தோன்றிய இடம் தமிழ்நாடு என் பது மறுக்கமுடியாத வரலாற்று உண்மை. அவ்வாறு தோன்றிய தமிழர் பல துறையிலும் இயற்கை யோடியைந்த வாழ்வு நடத்தினர். இயற்கையும் இவர்களுக்கு அன்னை யைப்போல் உதவியது. தமிழர்தம் இலக்கியத்தால் தமிழர் மனநிலை- காதலர் மனநிலை - இயற்கையை ஒட்டி அமைந்தது எனலாம்.

முதன் முதல் குறிஞ்சிநிலத்தே (மலை நிலத்தே) தோன்றிய மக்கள் குறிஞ்சியின் முருகை (அழகைக்) கண்டனர். முல்லை, மருதம், நெய் தல் முதலிய ஏனை நிலங்களுக்கும் முருகுபெற ஏற்றவற்றைத் தருவது குறிஞ்சியே.

அழகு, இளமை, மணம், கடவுள் தன்மை ஆகிய இயல்புகளைக் கொண்ட ஒன்றைப் பண்டைத் தமி ழர் "முருகு" என்றனர். முருகு என்பதற்கு ஆண்பால் விகுதியான அன் விகுதிகொடுத்து "முருகன்" எனப் போற்றினர். குறிஞ்சியின் செம்மை அழகை அவனுடைய உடலமாக்ககினர்.

பின்னர் மக்கள் முல்லை நிலத்தில் புகுந்தனர். முல்லை என்பது காடு. காடு பசுமையாயிருக்குமன்றோ! அப் பசுமையைக் கண்டு "பச்சை மாமலைபோல் மேனி" யனை திரு மாலைத் தெய்வமாக்கினர்.

மருதத்திற்கு மழை தருபவனை இந்திரனைத் தெய்வமாக்கினர். இவ்வாது பழந்தமிழர் இயற்கை யின் அழகைக்கொண்டே தங்களி னும் மேம்பட்ட சக்தியுடையவற் றிற்கு இயற்கையை யொட்டிப் பெயர்படைத்து வணங்கினர்.

"விழவு மலி மூதூர்", "சாறு அயர் மூதூர்" எனத் தமிழர்களது ஊர்கள் புகழப் பெறுதலின் தமிழர் கள் விழா கொண்டாடியிருந்தன ரென அறியலாம். நாம் ஆராய் வுள்ள இத்தமிழர் திருநாளும் இவ் வடிப்படையிலேயே கொண்டாடப் படுகிறது.

முருகன் தமிழர் முதல் தெய்வம். அவனது இரு கண்கள் சூரியனும் சந்திரனும். அஞ்ஞாயிறும் மதியும் இன்றேல் உலகில் வெப்பமேது ஒளிஏது? உழவு ஏது?

காட்டிலே ஆவினங்கள் வாழ்கின் றன. அக்காட்டிற்கு இறை திரு மால். ஏன்? அவ்வாவினங்களை மேய்ப்பவனுகவல்லவா அவனைக் கூறுகின்றோம்? அவ்வாவினங் களின்றேல் உழவரால் என்ன செய்யமுடியும்?

மழையின்றேல் உலகில் புல்ஏது? பூண்டு ஏது? மக்கள் வாழும் வழி ஏது? உழவன் பயிர் செய்வது ஏது? எனவே தமிழன் தனக்கு உதவி செய்யும் இயற்கையை நோக்குகின் றான். மழை, ஞாயிறு, ஆநிரை முத லியவைகளை நோக்குகின்றான். இவ் வியற்கைகளாலன்றோ நாம் வாழ்ந் தோம்? இவ்வியற்கைக்குச் செய் நன்றியறிதலாக நாம ஒன்றும்

செய்யாவிட்டால் பாவமாயிற்றே? ய்ன நினைக்கின்றான். ஏன்?

"ஆன்முலை யறுத்த
அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர்
கரு சிதைத் தோர்க்கும்
குரவர் தப்பிய
கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கில்
கழுவாயும் உளவே
நிலம் புடை பெயர்வ
தாயினும் ஒருவள்
செய்நன்றி கொன்றார்க்கு
உய்தி இல்லென
அறம் பாடிற்றே
ஆயிழை கணவ!"—என்ற

புறநானூற்றைப் போற்றியவனல்லவா தமிழன்!

"எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு

—என்ற தமிழ் மறையின் மொழிப்படி நடப்பவரன்றோதமிழர்! எனவே தாம் இன்புடன் வாழ ஏற்றமளித்த இயற்கைக்குச் செய்நன்றியறிதலாக விழாக் கொண்டாட நினைக்கின்றான். அவ்வியற்கைத் தெய்வங்களத்தனையும் ஒரே சமயத்தில் கொண்டாடி தன் செய்நன்றியைத் தெரிவிக்க நினைக்கின்றான். அதற்கான நாட்களையும் இயற்கையையொட்டிக் கோவைப்படுத்தினான். அதுவே தைத் திருநாளாம் தமிழர் திருநாளாயிற்று.

தமிழன் தமிழர் திருநாளைத் தை மாத ஆரம்பத்தில் கொண்டாட எண்ணம் கொண்டது ஏன்?

தமிழரது முக்கியச் செல்வம் மேழிச் செல்வம். பொன் வெள்ளி மிகுந்துள்ள நாட்டைவிட உணவு மிகுந்துள்ள நாடே பெருமை பெறும். ஒவ்வொருவரும் புலமையோடு தொழிலும் பெற்றிருக்க வேண்டும். சங்க காலப் புலவர்களாய மருத்துவன் தாமோதரனார், கூலவாணிகன் பெருஞ்சாத்தனார் முதலியவர்களின் பெயர்களே இதை வலியுறுத்துவனவாம். சங்ககாலம் முதல் தமிழ் மக்கள் உழவுத் தொழிலையே போற்றி வருகின்றனர்.

"உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார்
மற்றெல்லாம் தொழுதுண்டு
பின் செல்பவர்"

"உழுவார் உலகத்தாக்கு ஆணி"
"மேழிச் செல்வம் கோழைபடாது"

என்ற ஆன்றோர் மறை மொழிகளை ஆயின் உழவுத் தொழிலே நனி சிறந்தது எனப் புலனாகும். இத்தகைய தமிழ் மக்கள் ஆனிமாதத் தொடக்க முதல் தம் வேலையைத் துவக்குகின்றனர்.

ஆனி மாதத்தில் நிலங்கள் தரிசாய்க் கிடக்கின்றன. அவற்றை விளை நிலமாக மாற்ற உழவேண்டுமல்லவா? அதற்காக உழப்புறப்படுகின்றான் அக்காலை,

"வேப்பங் கலப்பை கட்டி
வெள்ளைக் காளை ரெண்டும் பூட்டி
தங்கக் கொழுவும் மூட்டி
தரிசுழுவப்போர மச்சான்"

என்ற குரல் கேட்டு நிமிர்கின்றான். தன் துணைவி நிற்பதைக் காண்கின்றான். இருவரும் புறப்படுகின்றனர். இவ்வாறு ஆனிமாதம் உழவு உழும் மாதமாய் விடுகிறது.

ஆடிமாதம் துணைவி விதையை உழவுக்காலில் தூவ உழுகிறான். இவ்வாறு ஆடி விதைவிதைக்கும் மாதமாய் விடுகிறது.

ஆவணி மாதத்தில் களை எடுத்தனர். புரட்டாசி மாதம் பயிர் காட்சியளிக்கிறது

ஐப்பசியில் பயிர் கதிர்கொள்கிறது. கார்த்திகையில் கதிர் முற்றிப் பெரியோர்களைப் போல் தலை தாழ்ந்து நிற்கிறது.

மார்கழியில் உழவன் தன் துணைவியிடம் கூறுகிறான். துணைவி ஆட்களை வரச்செய்கிறாள். அறுவடை தொடங்குகிறது.

தையில் எல்லோர் மனமும் மகிழ அறுவடை முடிகிறது.

மாசியில் அறுவடைத் செய்ததைக் காயவைத்தனர். களஞ்சியங்களில் பாதுகாத்தனர்.

பங்குனியில் இயற்கைச் செல்வத்தைத் தந்த இயற்கைத் தெய்வங்கட்கு விழா எடுத்தனர். முருகனது பெரு விழா உத்திர விழா வன்றோ?

சித்திரை வைகாசியில் மக்கள் மணவிழா கொண்டாடுவர். "சித்திரை வைகாசி செல்வத் திரு மணம்" என்பது பழமொழி.

எனவே இவற்றை நோக்கினல் தமிழர் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனரென அறியலாம். ஆடித் தொடக்க முதல் மார்கழி முடிய மக்கள் உழைப்புக்காலமாக நின்றது. தைமாதம் முதல் வரும் மற்றக்காலம் மக்கள் உழைத்ததன் பயனுல் இன்பமுறும் இன்பக்காலம். தமிழர் தைமாதத் துவக்க நாளைத் தமிழர் திருநாளாகக் கொள்ளப் பல காரணங்கள் உள. அவை:

ஆனி முதல் மார்கழி வரையுள்ள காலம் மக்கள் உழைப்புக் காலம். அக்கால நிலையைக் கூறும் கம்பர்,

> "பாடலம் வறுமை கூற
> பகலவன் பசுமை கூற
> கோடல்கள் பெருமை கூற
> குவலயம் சிறுமை கூற
> ஆடின மயில்கள்
> பேசாதடங்கின குயில்கள்
> தேடுறத் தளர்ந்தார்
> போன்றும்
> திருவுளக் கிளர்ந்தார்
> போன்றும்"

எனக் கூறியுள்ளார். எனவே இக் காலத்தில் குவலயம் சிறுமை கூர்ந்துள்ளது. அது பெருமைகூடும் காலம் எது? தைமாதத் துவக்கம் முதல் பெருமை கூர்கிறது. அதனுல் அந்நாளைக் கொண்டாட எண்ணினர்.

தமிழர் தம் இயற்கைக்கு நன்றி செலுத்த நல்ல நாளை நோக்கினர். தங்களுக்கு வெப்பமும் வெளிச்சமும் தரும் ஞாயிறு மங்கலத்திசை நோக்கும் நாளினைக் கண்டனர். ஞாயிறு, தைமாத முதல் தேதியன்று மங்கல திசை நோக்கித் தன் தேரைச் செலுத்துகிருன்.
அதை,

> "நனியாடல் நற்கடவுள்
> நமன் திருதி தண்ணுதிசை
> நாட்கள் தோறும்
> முனியாமல் நடந்திளைத்து
> முன்னேனினும் பரிதாபம்
> முதிர்ந்ததென்று
> தனியாழி தனிநெடுந்தேர்
> தனிப்பச்சை நிறப்பரியை
> சயிலராசன்
> பணியாமல் விடாய் தணிப்பாய்
> பனிப்பகைவன்
> பணிசெய்வோன்
> பக்கம் சேர்ந்தான்"

என்ற பாடலால் அறியலாம். ஞாயிறங்கடவுள் மகிழ்வுத்தேரை வட திசை நோக்கிச் செலுத்துகிருன் என்றல் அத்தகைய நன்னளாம் தை முதல் நாளைத் தமிழன் கொண்டாடுவதில் வியப்பில்லை அல்லவா?

குளிரும் பனியும் ஓரளவு கலந்துள்ள மார்கழி மாதம் பீடை மாதம் என்று கூறுவது வழக்கம். அதாவது நோய்கள் மிகுந்துள்ள மாதம் அது. மக்கள் குளிராலும் பனியாலும் ஏற்படும் வியாதியால் அல்லலுறுவர். அம்மாதக் கடைசி நாளில் இப்பீடை மாதம் ஒழிந்தது என்று பழையன கழித்துப் புதியன புகுத்திக் கொண்டாடுகின்றனர். பீடைமாதம் முடிந்தாலும் உழைப்பின் பயனை நிறைய அனுபவிக்கும் முதல் நாளானதாலும் இந்நாளினைக் கொண்டாடுகின்றனர். "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது இதனுல்தான் போலும்.

இனி தமிழர்கள் தமிழர் திருநாளை எவ்வாறு கொண்டாடுகின்றனர் எனப் பார்ப்போம்.

ஒளியைத் தருபவன் சூரியன் வெப்பத்தைத் தருபவன் சூரியன். மழை உண்டாவதற்கு இன்றிமைதாக துணையாயுள்ளவனும்சூரியன். ஆதலின் சூரியனுக்கு நன்றி செலுத்தும் முறையில் தைப்பிறப்பன்று முற்றத்தில் பொங்கலிட்டு இயற்கைக்கடவுளாம் சூரியனை வணங்குவது தமிழர் மரபாயிற்று

மறுநாள் தைத்திங்கள். இரண்டாம் நாள். இதுகாறும் குடியானவனின் நண்பனாய் நெல்லைத் தந்து புல்லைத் தின்னும் கைமாறு கருதாத ஒற்றினங்கட்கு நன்றியறிதல் செலுத்துவதற்காக மாட்டுப் பொங்கல் நடக்கிறது. இதில் முல்லை நிலக் கடவுளாகிய கண்ணனுக்குப் பொங்கலிடுவதாகக் கூறுவர். ஏனெனில் கண்ணன் கோபாலனல்லவா? அந்நாளில் மாடுகளின் ஓட்டப்பந்தயம் நடைபெறும் இதே நாளில் சங்க காலத்தில் இது ஏறுதழுவல் விழாவாக நடைபெற்றது. ஏறுதழுவல் விழாவில் வெற்றி பெற்ற இளைஞர்களை முல்லைநில மகளிர் மணந்தனர்.

தை மூன்றும் நாள் காணும் பொங்கல். இதைக் கன்றுப் பொங்கல் என்றும் கூறுவர். எதிர்காலத்துதவும் கன்றுக்கு முன்கூட்டியே நன்றியறிதல் காட்டும் பழக்கம் தமிழனது பெருமையை விளக்கும். மேலும் 'பகையை மறந்து நட்போடு வாழவேண்டும்' என்ற தமிழர் பண்பாட்டைக் காணும் பொங்கல் அறிவுறுத்துகின்றது. இவ்வாறு தமிழர் திருநாள் தைமாதத் தொடக்கமாக இருக்க அதற்கு முதல் மாதமான மார்கழி கடைசிநாளில் போகிப் பண்டிகை கொண்டாடுகின்றனர். இது பிற்கால வழக்கங்களுள் ஒன்று. போகி என்பது இந்திரனுக்குப் பெயர். அவன் மழைத் தெய்வம். விளைவுக்கு மழை தேவையானதால் இந்திரனை வணங்க எண்ணினர் மக்கள். இந்திர விழா சங்கத் தமிழர்களால் தை மாதத்தின் பிறகே கொண்டாடப்பட்டது எனலாம். ஏனெனில் சிலப்பதிகாரத்தில் சித்திரைத் திங்களில் சித்திரை நட்சத்திரத்தன்று இந்திர விழா கொண்டாடப்படுவதாகக் கூறப்படுகிறது. எனவே மார்கழித் திங்கள் இறுதியில் கொண்டாடப்படும் போகி பண்டிகை பிற்காலத் தமிழர் வழக்கமாகும்.

இத் தமிழர் திருநாள் இயற்கை புரிந்த பேருதவி கட்குக் காட்டும் நன்றியுணர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு எழுந்தது என்பதைக் கதிரவனை நோக்கிப் படைத்தல், மாடுகளையும் கன்றுகளையும் அலங்கரித்தல், தொழிலாளர்களுக்குப் பெருமையளித்தல், பகைவரிடத்தும் அன்பு காட்டுதல் முதலிய பல்லாற்றாலும் அறியலாம்.

இயற்கையோடு இயைந்து வாழும் தமிழ் மக்கள், தமக்கு ஏற்றமளித்த எல்லா இயற்கைத் தெய்வங்கட்கும் ஏற்றவகையில் இதை விட வேறு எந்த வகையில் ஒரு விழாவைக் கொண்டாட முடியும்? வாழ்க தமிழர் திருநாள்!

—'நவஇந்தியா'

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

(19ம்-பக்கத் தொடர்ச்சி)

தன் மனதில் எழுந்த சந்தேகங்களை இப்படி விவாதிக்க முன்வந்ததற்கு திரு. சுப்ரமண்யத்தைப் பாராட்டுகிறோம். கல்வித் துறையில் நமது நோக்கம் என்ன? அரசியல் அம்சங்களைப் புகுத்தாமல் அந்த நோக்கத்தை எப்படி நிறைவேற்றலாம்? இவைகளையெல்லாம் பற்றிக் கல்வித் துறையிலுள்ளவர்களிடம் நிதானமாக விவாதித்து ஒரு நிலையான ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

## பொழுது போக்கு

அரசியல் நிர்ப்பந்தத்தை முன்னிட்டு அவ்வப்போதைய தேவைகளுக்கேற்றபடி கல்வி முறையில் தலையிட்டுக் கொண்டிருப்பது நமக்குப் பொழுது போக்காயிருந்தாலும் வருங்கால சந்ததிகளின் நலன்களுக்கு ஏற்றதல்லவென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

—'தினமணி'
30-12-60 தலையங்கம்.

# மலைகள் செறிந்த எதியோபியா

மன்னர் ஆட்சியும் மக்கள் ஆட்சியும் கலந்த நிர்வாக அமைப்புள்ள நாடுகளில் எதியோபியாவும் ஒன்று. அதாவது நிர்வாக அமைப்பு முறையில் ஏறத்தாழ பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகளையொத்தது. மன்னரும் உண்டு. பார்லிமென்டும் உண்டு. இதன் பழைய பெயர் அபிசீனியா.

எதியோபியா வட கிழக்கு ஆப்பிரிக்காவில் இருக்கிறது. வட கிழக்கிலும் தென் கிழக்கிலும் சோமாலிலாந்தும், தெற்கில் கென்யாவும், மேற்கில் சூடானும், இந்நாட்டின் எல்லைகளாகும்.

நாட்டின் விஸ்தீரணம் சுமார் மூன்றரை லட்சம் சதுர மைல்கள். இந்தியாவின் பரப்பளவில் கால் பாகத்திற்கு இது சமமாகும். இன்னும் தெளிவாகத் தெரியவேண்டுமானால் சென்னை மாநிலத்தைப் போல் சுமார் ஏழு மடங்கு விஸ்தீரணம் உள்ள நாடே எதியோபியா. சென்னையின் விஸ்தீரணம் சுமார் 50 ஆயிரம் சதுரமைல்கள்.

எதியோபியாவின் ஜனத்தொகை சுமார் 2 கோடி (1956-ம் வருட சென்சஸ் கணக்குப்படி) 1 கோடி கிருஸ்தவர்களும், 40 லட்சம் முஸ்லிம்களும் உள்ளனர். யூதர்களும் இதரர்களும் 60 லட்சம் பேர்.

எதியோபியா மலைகள் செறிந்த நாடாகும். நீல நைல் என அழைக்கப்படும் அப்பை, பாரோகிபே போன்ற நதிகள் வளம் பெருக்கும் சாதனங்களாக உள்ளன. பிரதான தொழில் விவசாயம். கோதுமை, பார்லி, புகையிலை, கரும்பு, காபி முதலியன குறிப்பிடத்தக்க அளவில் பயிராகின்றன.

எதியோபியாவில் பயிராகும் காபி தரத்தில் உயர்ந்தது. இதுவே இந்நாட்டிற்குப் பெருமளவு அந்நிய செலாவணியைச் சம்பாதித்து தருகிறது எதியோபியாவில் குதிரைகள் எண்ணிக்கையில் குறைந்ததெனினும் பிரசித்திப்பெற்றது. போலோ விளையாட்டுக்கு நேர்த்தியானது.

பிளாடினம், தங்கம், வெள்ளி, மாங்கனீசு, செம்பு, பொட்டாஷியம் கந்தகம், மைகாபோன்ற உலோகப் பொருள்கள் எதியோபியாவில் ஏராளம். நீர்மின் சார சக்தி தாராளமாக உள்ளது. தொழில் உலகில் இப்போதுதான் அடியெடுத்து வைத்திருக்கிறது. தொழில் அபிவிருத்தியில் துரிதமாக முன்னேறி வரும் நாடுகளில் இதுவும் ஒன்று.

மன்னர் ஹெய்லி செலாசியின் மூதாதையர் சுமார் மூவாயிரம் ஆண்டுகளாக எதியோபியாவை ஆண்டு வருகின்றனர். ஜப்பான் மன்னர் பரம்பரையினரும் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளாக ஜப்பானை ஆண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

எதியோபியாவின் மன்னர் ஹெய்லி செலாஸி தம் பரம்பரையில் 225-வது மன்னராகப் பட்டத்திற்கு வந்தவர். 1893 ஜூலை 23-ல் பிறந்த ஹெய்லி செலாஸி 1930 நவம்பர் 21ல் மன்னர் பதவி ஏற்றார்.

ஜனநாயகக் கண்ணோட்டமும் பரந்த மனப்பாங்கும் கொண்ட இவர் பதவி ஏற்ற மறுவருடத்திலேயே (1931-ல்) பார்லிமென்ட் அமைப்பு முறையை நாட்டில் புகுத்தினார்.

முன்னறிவிப்பு ஏதுமின்றி யுத்தப் பிரகடனமும் செய்யாது 1935-ல் இத்தாலி அபிஸீனியாவின் (இன்றையப் பெயர் எதியோபியா) ஒரு பகுதியை ஆக்ரமித்துக்கொண்டது.

மன்னர் ஹெய்லி செலாஸி பறி கொடுத்த பகுதியை மீண்டும் கை வசமாக்கத் தீவிரமாகப் போரிட்டார். முடியாது போகவே ஐரோப்பா வந்து சர்வதேச சங்கத்தில் முறையிட்டு உதவி கோரினர்.

சர்வதேச சங்கம் எதியோபியாவின் முறையீட்டுக்குச் செவி சாய்த்தது. இத்தாலியைக் கண்டித்தது. ஆக்ரமிப்பைக் கைவிடக்கெஞ்சியது. இவை செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. சர்வதேசசங்கத்தை துச்சமென்ன மதித்த இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி எதியோபியாவை இத்தாலியுடன் இணைத்துக் கொண்டான் இரண்டாவது உலகப் போரின் கால் கோள் போர் என இதைக் குறிப்பிடலாம்.

19;9-ல் இரண்டாம் உலகப்போர் ஆரம்பமாகியது. நேச நாடுகளின் கை ஓங்கியது. 1941ல் பிரிட்டிஷ் ராணுவம் இத்தாலியின் ஆக்ரமிப்பில் இருந்த எதியோபியாவைக் கைபற்றி விடுதலை அளித்தது. இத்தாலியின் காலனி நாடாக இருந்த எரிடிரியா,1952-ல் எதியோபியாவுடன் இணைக்கப்பட்டது.

மன்னர் ஹெய்ல் செலாஸி 1955-ல் புதிய அரசியல் சட்டம் ஒன்றைப் பிரகடனம் செய்தார். புதிய அரசியல் சட்டத்தில் மக்களுக்கு ஓரளவு உரிமைகள் வழங்கப்பட்டன. வாக்குரிமை பெற்றனர். பார்லிமென்ட் அமைப்பு முறை ஸ்திரம் பெற்றது. சட்டசபை, மேல் சபை தோன்றிற்று. மேல் சபை அங்கத்தினர் 6 வருடத்திற்கு ஒரு முறையும், சட்டசபையினர் 4 வருடத்திற்குஒரு முறையும் தேர்ந்தெடுக்க அரசியல் சட்டத்தில் இடமளிக்கப்பட்டது.

எதியோபியாவின் மொழி அமாரிக் ஆனல் ஆங்கிலம் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது எதியோபியாவின் நாகரிகம், பண்பாடு வரலாற்று முக்யத்துவம் வாய்ந்தவை. கிரேக்க எகிப்திய நாகரிகங்களுடன் கலந்து எதியோபியா நாகரிகம் உலகு எங்கும் வியாபித்தது.

எதியோபியாவின் நிர்வாக அமைப்பு முறைப்படி ராணுவத்தின் பிரதம தலைவர் (தளபதி) மன்னரே எதியோபியா இராணுவத்தினர், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

—'நவஇந்தியா'

—x—

# நீங்கா ஓவியம்

தாமரைக் கண்ணன்

எழிலின் அறை திறந்து கிடந்தது. உள்ளே சென்றேன். யாரோ ஒருவர் தாடியும் மீசையும் வளர்த்துக்கொண்டு அழுக்கு நிறைந்த கத்தல் உடையுடன் தலைவிரிகோலமாக அமர்ந்திருந்தார். கூர்ந்து பார்த்தேன். என் கண்கள் மயங்கின. அவர் ....எழில்! என் உயிர்க்குயிரான எழிலேதான்!

'நம்மை வரவேற்க எழில் புகை வண்டி நிலையத்திற்கு வந்திருப்பார். நாம் அவர் கண்களில் படாமல் வேறு வழியாக அறைக்குச் சென்று ஏமாற்றவேண்டும்—சோர்ந்த உள்ளத்தோடு அறைக்கு வரும் எழில் நம்மைக் கண்டு திகைக்கவேண்டும்" என்றெல்லாம் எண்ணிக்கொண்டே வந்த நான், எழில், அறையில் இருந்ததைக் கண்டதும் திடுக்கிட்டேன்; திகைத்து விட்டேன்.

"எழில்!" எழுதுவதில்தீவிரமாகக் கவனம் செலுத்திக் கொண்டிருந்த எழில் திரும்பி என்னைப் பார்க்கவில்லை. நான் பையை சுவற்றிலிருந்த ஆணியில் மாட்டி விட்டு அவர் பின்னல் சென்று நின்றேன். எழில் அஞ்சல் எழுதிக்கொண்டிருந்தார்.

'என் உயிர் மலையழகனுக்கு...

கடிதம் எனக்குத் தான். ஆகவே அதைப் படிக்க மனம் தூண்டியது. படித்தேன்.

'கருணை, காதல் நிரம்பிய இவ்வுலகம் இன்பமயமானது. தொண்டே கடமையெனக்கொள்ளும்பெண் தெய்வங்கள் இருக்கும் வரை உலகம் இன்ப பூமியாகவே வாழும் என்று முன்பு ஒரு தடவை உனக்கு எழுதியிருந்தேன்.

'மலே!' அது தவறு என்பதை இன்று உணருகிறேன். பொய்மை, பொருமை, வஞ்சனை எல்லாம் சேர்ந்த இவ்வுலகம் கொடுமையானது. இயற்கை, மலையையும் மலையில் அருவியையும், அருவியில் நீர் வீழ்ச்சியையும், விண்ணையும் மண்ணையும் நடமாடவிட்டது அதனல் தான், நாளுக்கு நாள் துன்பம் பெருகிக் கொண்டே போகிறது. பெண்களைப் புகழ்வது, பெரிய புற்றில் பாலும் முட்டையும் வைத்து பாம்புகளை அதிகமாக்கிப் பகைவர்களைப் பலப்படுத்தும் பயங்கரமான முட்டாள் தனத்திற்குச் சமமாகும்.

'குற்றம் புரியா நாங்கூழ்ப் புழுக்களைத் தூண்டில் முள்ளில் கோத்து வதைப்பதைப் போலவே, குறை காணமுடியாத பெண்களையும் சாகடிக்கவேண்டும்....'

பெண்களையும் பெண்மையையும் போற்றிப் போற்றி எழுதிய எழிலின் கைதான் இவ்வாறு எழுதிக் கொண்டு சென்றது. மேலும்....

'மலே! உனக்குத்தான் தெரியுமே தாமரையும் நானும் எப்படிப் பழகினேம் என்பது. இப்பாழும் சமூகம் பணத்தைக் காட்டி, சாதியைக் காட்டி, பழக்க வழக்கம் என்னும் கோரப் பல்லைக் காட்டி அவளும் நானும் என்றுமே ஒன்றுசேராதபடி பிரித்துவிட்டது. இன்று என் கண்மணியின் கண்களிலிருந்துநீர்தாரை தாரையாகக் கொட்டுகிறது. பெண் ஒருத்தி இருப்பதால் எத்தனை பேர் நெஞ்சில் நெருப்பைக் கட்டிக் கொண்டு வாழ்கிருர்கள் தெரியுமா?

'மலே! என் தாமரை அழுது கொண்டிருக்கிருள். அவளுடைய

அழகிய மலர்க் கண்களிலிருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டிருக்கிறது. என் தாமரை அழுகிருள்— அய்யோ....'

எழுதுவதை நிறுத்தி விட்டு எழில் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டார். எனக்கு உயிரே போய்விடும் போலிருந்தது.

"எழில்!... எழில் ...!"

அவர் முகத்தைத் திருப்பினேன். எழில் கலங்கிய கண்களுடன் என்னை நோக்கினர். அவர் உடலைக் குலுக்கினேன்,

'என்ன எழில்? என்ன?'

எழில் என்னைக் கூர்ந்து பார்த்தார். "யார்? மலையா? மலை! அய்யோ! என் 'தாமரை அழுகிருள்; எப்போதும் அழுது கொண்டேயிருக்கிருள், மலை! சரியாகக்கூட சாப்பிடுவதில்லையாம். அவளுடைய மென்மையான உடல், முகம் திரிந்து நோக்கிய பார்வையைக் கண்ட விருந்தினர் முகம்போல வாடி வதங்கிவிடுமே. அவளை அழவிட்டுவிட்டார்களே, அவளுடைய பெற்ருேர்கள்! நீ தான் சொல் என் தாமரையைக் கட்டுதிட்டப் படுத்தி அழவைக்க அவர்கள் யார்? நான் அவள் காதலன்; இல்லை இல்லை—கணவன்! நானே போய்க் கேட்கிறேன், அவர்களை! என்னை விடு, மலை, என்னை விடு!"

எழிலின் உடலும் மனமும் அளவுக்கு மீறிய அதிர்ச்சியை அடைந்துவிட்டன. 'பிறகு போய்ப் பார்க்கலாம். படுத்துக்கொள், எழில்' என்றேன். அந்த நிலையைச் சமாளிக்க என் முழு அறிவையும் சக்தியையும் பயன் படுத்திக்கூட சில கணங்கள் வரை எனக்கே எதுவும் புரியாமல் போய்விட்டது.

"தாமரை—அழாதே. அழாதே தாமரை!" என்று கூறிக்கொண்டே எழில் என் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதார். எத்தனையோ நாட்களாக மனதில் அடைபட்டுக் கிடந்த உணர்ச்சி வெள்ளம் பீறிட்டுக்கொண்டு வெளிவந்தது.

எழிலை மெதுவாகக் கட்டிலில் படுக்க வைத்தேன். ஒன்றும் புரியாத நிலையில் நாற்காலியில் அமர்ந்து அக்கடிதத்தை மறுபடியும் ஒரு தடவை படித்தேன். கடிதத்தின் அருகில் எழிலின் நாட்குறிப்பேடு இருந்தது. அதைப் படித்தால் எல்லாம் தெரிந்துவிடும் என்று கருதி இடையிடையே படிக்க ஆரம்பித்தேன்.

இன்பத்தின் எல்லைக்கோடு— துன்பத்தின் துவக்க விழா! இது என்னுடைய மொழி.

பருவத் துடிப்பு என் நாடி நரம்புகளை அதிரவைத்த போது இன்பத்திற்காக ஏங்கி நின்றது, இதயம்; இனிய கற்பனையைத் தாங்கிச் சென்றன, நாட்கள்.

இளமையும் அழகும் கொப்பளிக்கும் பெண் மயில்களைக் கண்டு சுருண்டுகொண்ட என் இதயம் தொட்டாற் சுருங்கியதாக மாறிவிட்டது. சூரியனே தாமரையை நாடி வருவதாக எண்ணிய நான், தாமரையும் சூரியனை எண்ணித் தவம் செய்யும் என்ற உண்மையை இன்று தான் உணர்ந்தேன்.

தாமரை! அந்த முழுமதி எப்படித்தான் பணத்திமிரும் சாதி வெறியும் கொண்ட என் முதலாளிக்கு மகளாக் உதித்தாளோ—யாருக்குமே தெரியாது அதன் இரகசியம்.

தாமரை ரோஜாப் புஷ்பங்களால் கட்டப்பட்ட புதுமைக் கோயில்— அந்தக் கோயிலிலும் ஒரு தெய்வம் —எழில் என்ற தெய்வம்.

தாமரை, தன் இதய கமலங்களை எனக்குச் சமர்ப்பித்தாள்; கணையாழியைக் கழற்றி என் கை விரலில் போட்டாள்; தன் தந்த விரல்களால் தயாரித்த மணங் கமழும் மலர் மாலையை என் கழுத்தில் போட்டுப் பார்த்துப் பூரித்தாள்; பொங்கிப் பூரித்து நின்ற அழகுக் கோட்டம் என் எங்கிருந்தேனே? அவளுடைய பேசும் கன்னங்கள்—பேசா

மல் பேசிய விழிகள்—அமுதம் நிரம்பிய அதரங்கள்-அப்பப்பா...!

என் உள்ளமே! நீ பெறுதற்கரிய பேறு பெற்றுவிட்டாய். தாமரையே .... தமிழ் இலக்கியமே .. இன்பப் பொக்கிஷமே...என் எதிர்காலமே! உன்னை நினைப்பின், என் உள்ளமெல்லாம் கள்வெறி கொள்கிறது!

... ... ...

மனத்தின் இளமைப்போராட்டம் உடலைக் கொன்று வந்த நாட்களை மென்று தின்ற தினம் இன்றைய தினம்.

தாமரையின் வீட்டுப் பெரிய தோட்டத்தின் கோடியில் இருக்கும் கிணறுதான் எங்கள் காதலுக்குப் புகலிடம் தந்து வளர்த்து வருகிறது அதைச் சுற்றி உயரமாக வளர்ந்திருக்கும் பூஞ் செடிகள் ,எங்கட்குப் பாதுகாப்பு அரண்.

'ஆறுமணிக்கு வருவேன்' என்ருள். அதே நேரத்திற்கு வந்து விட்டாள்.

உலகில் பரந்த பரப்புடையது நீலநிறக் கடல்—அதில் உள்ள அலைகள் கோல நிலவைக் கண்டவுடன் ஏன் கூத்தாடுகின்றன ! இதன் காரணத்தைப் புரிந்து கொண்ட மனிதர் யாரும் எங்களைக் குறைகூற மாட்டார்கள்.

அவள் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தேன். அவள் குனிந்து என்னையே நோக்கிக் கொண்டிருந்தாள். அவள் முகத்தைக் கண்ட நான் வானத்திலிருந்து வட்ட நிலவே இடந்தெரியாமல் இறங்கி வந்து விட்டதாகக் கருதினேன்' ஆஹா! கண்களில் வீசிய ஒளி—தீராத காதலைக் காட்டியதா? திடிரென ஏற்பட்ட மையலைக் கொட்டியதா?

ஏ கண்களே! பெண்களின் முகத்தில் வாழும் கருவண்டுகளே! நீங்கள் ஏன் மனநூல் படித்துத்தேர்ந்த மனத்திற்குக் கூட உண்மையை கூருத புதிராக விளங்குகிறீர்கள்? என்ன இருந்தாலும் வெற்றி ஆண்களுக்குத்தான்; பெண்மையைப் பெண்கள் ஆளும் வரை.

ஆணின் உள்ளமும் பெண்ணின் உள்ளமும் இரண்டறக் கலந்தால் அங்கு பனிச்சாரால் வீசும்; பெருமழை பெய்யும்; நறுமணம் கமழும்; மலர்முகம் நாணித்தாழும்; பவள, அதரங்கள் வெளிறிப்போகுள பின்பு...பின்பு...?

தாமரை.. என் எழிலரசி ஏழரை மணிக்குப் போனுள்.

x x

இன்று மணி ஏழு. கிணற்றங்கரை! தாமரை வந்தாள்; மலர்க் கொத்தை அப்படியே அள்ளிக் கொண்டேன். துடிதுடித்துக்கொண்டிருந்த அவன் இதயத்தை என் கண்களால் தொட்டுப்பார்த்தேன். அவள் என்னைப் பற்றி எண்ணி எண்ணி அடுக்கி வைத்திருந்த அத்தனை இன்பக் கோட்டைகளையும் கண்டேன்.

கருத்தோடு கருத்து சேர்ந்த போது பருவத் துடிப்பால் எங்கள் காதல் குருத்து விட்டுத் தழைத்தது.

அதற்குள்...

'தாமரை!....

தாமரையின் தந்தை மாடியிலிருந்தே அவளை அழைத்தார். அவருக்குத் தெரியாது, தன் மகள் தனது எதிர்கால வாழ்க்கைக்குக் கால்கோள் விழா நடத்திக் கொண்டிருக்கிருள்.

"அப்பா அழைக்கிருர். அத்தான்!"

அத்தான்!....??? பறந்து சென்று விட்டது அப் பைங்கிளி தளர்ந்த நடையோடு ஒதுங்கி ஒதுங்கி இல்லம் வந்தேன்என்பது.

அடுத்தடுத்து இன்பக் காரியங்கள் நடப்பவை, பின்னுல் அடுக்கடுக்காக வரும் துன்பக் காவியங்களுக்கு முன் எச்சரிக்கையாக இருக்குமா?

இரவு...எண்ண அலைகள் என்னை கிணற்றருகில் உட்காரவைத்தன; எழுச்சி அலைகள் அவளை அங்கு அழைத்து வந்தன.

வாடாமலர் அவள்—வாழ்க்கையில் வாடிய கொடியாக வந்து நின்ருள்.

"அப்பா நம்மீது சந்தேகப்படுகிருர்."

அந்தப் பிஞ்சுக் குழந்தையின் அன்பு நெஞ்சு நிறைய இருந்த மனக்கோட்டைகள், ஒவ்வொன்ருக இடிந்து விழுந்து கொண்டிருந்தன.

சண்பக மரம் சாய்ந்து விட்டாள், என்மீது

மனமொத்துத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் எப்படி இருப்பார்கள்? அப்படியெல்லாம் இருந்தோம்! ஏ, நித்திலமே! நீலவானமே! கற்பனையே. எங்களை உயிரோடு நெருப்பிலிட்டு சோதிக்க வேண்டாம்!

எங்கள் உயர்ந்த காதலுக்கு...... கிணறும் கிணற்று நீரும் சாட்சி!

அய்யோ! என் தாமரையின் கண்கள் கலங்கிய காட்சி! புண் பட்டது என் நெஞ்சம்.

இன்பச் சுரங்கத்தில் இருக்கும் போது, துன்பத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கத்தான் வேண்டுமா?

அன்று முதல் மாடியைவிட்டுக் கீழே வருவதில்லை. நான் அவள் மதி முகத்தைப் பார்க்கிறேன்; அவள் எனனைப் பார்க்கிருள். அதோடு இப்பாழும் சமூகம் தன் கழுகுப் பார்வையால் எங்களைப் பார்த்துக் கொண்டே யிருக்கிறது.

நான் வெளியில் சென்ருல் போதும்—வீதியில் பெண்களெல்லாம் கூடிக் கூடிப் பேசுவார்கள். தாமரை வெளியில் சென்ருல்போதும்—அப்படித்தான்! ஊராரைக் குறை சொல்லி என்ன பயன்? தங்கள் இளமை வயதை எண்ணிப்பார்க்கும் அளவிற்கு அறிவு இல்லாதவர்கள்; ஆற்றல் இல்லாதவர்கள், அவர்கள்.

பகல் பன்னிரண்டு மணி. நான் ஏதோ கணக்குப் புத்தகத்தை தேடுவதைப் போல மாடிக்குச் சென்றேன். எனக்குப் பின்னுலேயே அவள் தாயார் எதற்காகவோ மாடிக்கு வந்தார்கள்.

என்னைக் கண்டதும் என்னிடம் ஓடிவந்து தாமரை, எனக்குப் பின்னுல் வந்த தன் தாயாரைப் பார்த்ததும் திகைத்து நின்று விட்டாள், பிறகு சமார்த்தியமாக என் கையில் ஒரு சீட்டைத் திணித்தாள்.

உள்ளத் துடிப்புடன் தனியிடத்தில் அதை படித்துப்பார்த்தேன்,

"நெஞ்சத் திரையில்நீங்கா ஓவியமாய்க் களிநடம் புரியும் என் அன்பு அத்தானுக்கு! தங்களை அத்தான் என்று அழைக்க யாரும் எனக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை என் உள்ளுணர்வு சொல்லுகிறது; அழைக்கிறேன்.

"தாங்கள் எங்கள் சாதி இல்லையாம்; சொந்தம் இல்லையாம். மதி இல்லாதவர்கள் கூறுகிருர்கள், ஆனுல் எனக்கு என் சாதியும் பணமும், உறவும் உலகமும் வாழ்வும் வளமும் தாங்கள் தான்!

'அப்பா ஊரில் இல்லையல்லவா? இரவு ஒன்பது மணிக்குக் கிணற்றருகில் சந்திக்கின்றேன்.

வணக்கம்

தங்களையே நினைந்து உருகும்,
தாமரை

குறிப்பிட்ட நேரம் நான் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தேன்; அவள் வரவேண்டிய இடத்திற்கு வந்தாள்.

'என்ன செய்யலாம் தாமரை!'

'எல்லாம் தங்கள் பிரியம்!'

'.......................'

எங்கயாவது போய் விடலாம் அத்தான்'.

'உன் தந்தை வருந்தவாரே' பத்து மாதம் சுமந்து, பெற்று வளர்த்து பெண்ணுக்கிய உன் தாயார் மனம் ஒடிந்து விடுவார்களே!"

"ஏன்? நமக்குத் திருமணம் செய்து வைக்கட்டுமே!"

"தாமரை!"

''அத்தான்! நான் ஒரே முடிவுக்கு வந்து விட்டேன். எனக்கு எல்லாம் நீங்கள்தான். ஒன்று-நான் தங்களோடு வாழவேண்டும்; அல்லது சாக வேண்டும்!''

''அய்யோ கண்ணே!''

முகத்தோடு முகம்--கன்னத்தோடு கன்னம் எண்ணத்தோடு எண்ணம்--இதயத்தோடு இதயம் அதரங்கள் குழைந்தன! மெய் மறந்து நின்றோம். வானம் வையம் வாழ்வு மானம் மதிப்பு இருட்டு பயம் எல்லாவற்றையும் மறந்தோம். எங்கள் கண்களுக்கு எதுவுமே தெரியவில்லை. நான் அவளுக்குத் தெரிந்தேன்-அவள் எனக்குத் தெரிந்தாள் அவ்வளவுதான்!

அன்பின் அமுதத்தை அள்ளி அள்ளி உண்டேன்; இருவரும் இன்பக்கடலில் நீந்தி நீந்தித் திளைத்தோம்.

நாங்கள் காதலனும் காதலியுமாக இல்லை. கணவனும் மனைவியுமாக இருந்தோம்! பேசவேண்டிய விஷயங்களையெல்லாம் பேசினோம் செல்லவேண்டிய இடமெல்லாம் சென்றோம்.

பேசிக்கொண்டே என் கால்களை அழுத்திக்கொண்டிருந்தாள். நான் அந்தரத்தில் மிதந்து கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் சாதியும் பணமும் எங்குதான் சென்றனவோ தாமரை! கொஞ்சம் கொஞ்சமாக என் உயிருடன் ஒன்றிவிட்டாள்!

இன்பச் சிறுகதை வாழ்க்கையில் இன்பத்தை வாரி வழங்கிவிட்டு முடியுமபோது, துன்பத் தொடர்கதை மெதுவாகத் தலை தூக்கி முளைக்கிறது.

என்னை வேலையிலிருந்து நீக்கி விட்டார் தாமரையின் தந்தை. ஒரு மாத காலமாகிறது. தொட்டாலே துவண்டு விடும் அந்தத் தோகை மயில் நெருப்பிலிட்ட புழுவாகத் துடித்துக் கொண்டிருக்கிறாள்.

அய்யோ! எனக்காக உலகத்தையே வெறுக்கத் தயாராகிவிட்ட என் பொற்சிலை கண்ணீரும் கவலையுமாக இருக்கிறாளாமே! நான் கையாலாகாதவன்...எதையும் செய்ய முடியவில்லை என்னால்!

கெட்டவர்களுக்கு அவர்கள் வாழ்வில் ஒருதடவைதான் கெட்ட நாள் வரும்; நல்லவர்க்கு வாழ்வில் ஒரு தடவைதான் நல்லநாள் வரும், அதுவும அவர்கள் இறக்கும் நாள்!

வாழ்க்கையில் சோதனைக் காலம் வருவதெல்லாம் சமாளிக்க முடியாதவர்களுக்கே அதனாலேயே அவர்கள் வாழ்வே நசிந்துவிடுகிறது.

ஏ, தமிழகமே! தாயகமே! நீ எங்களை ஒன்று கூட்டி வைத்து வாழ்வளிக்கப் போகிறாயா? இல்லையேல் எங்களுக்கு மரண வாயிலைக் காட்டித் தாழ்வடையப் போகிறாயா?

எழிலின் கடைசி நாட்குறிப்பைப் படித்து முடித்தபோது என் வாய் 'எழில்-எழில்' என்று இரண்டு தடவை முணு முணுத்தது.

என் வாழ்க்கையில் எனக்கு தன்னம்பிக்கை ஊட்டியதே எழில்தான் நான் மனமுடைந்து இருந்த சமயங்களில் 'தன்னம்பிக்கையே உற்றுழி உதவும்-தன்னம்பிக்கையுள்ள மனிதன் நிச்சயம் வெற்றியடைவான்' என்றெல்லாம் கடிதம் எழுதிஎன்னை ஆறுதலடைய வைப்பார்! அப்படிப் பட்ட எழிலுக்கு நான் எப்படி இப்போது தன்னம்பிக்கையூட்டுவேன்?

அறைக் கதவைத் திறந்து கொண்டே யாரோ ஒரு அழகான பெண் உள்ளே வந்தாள். அவள் முகம் கருகியிருந்தது

'எழில் இருக்கிறாரா?''

''நீ யாரம்மா'' என்று கேட்டேன்.

''நான் அவர் மனைவி; அவர் என் அத்தான்! நீங்கள் யார்?''

''மலையழகன்''

''மாளும்பதியிலிருந்து வந்தீர்களா?''

',ஆமாம் அம்மா!'

''அய்யோ அண்ணா!' அவள் முகத்தைத் தன் தளிககரங்களால் மூடிக்கொண்டு குலுங்கி குலுங்கி அழுதாள். ' 'அவள் தாமரையாக இருப்பாள் எழில் நம்மைப் பற்றி சொல்லியிருப்பார்' என்று யூகித்துக் கொண்டேன்.

"அழாதே, தாமரை! வா இப்படி" என்று அழைத்தேன்.

தாமரை அருகே வந்தாள். படுத்திருப்பது யாரண்ணு, என்று கேட்டாள். "அத்தான், தாமரை" என்றேன்.

"ஆ அத்தானு? அண்ணு! அமைதியும் அன்புப் பார்வையும் குடிகொண்டிருந்த அவர் முகத்தைப் பார்த்தீர்களா அண்ணு!

தாமரை இப்படியும் அப்படியும் ஓடினுள் நீர் எடுத்து எழிலின் முகத்தில் தெளித்தாள் 'அத்தான்— அத்தான்' என்ருள். முன்தானையால் எழிலின் முகத்தைத்துடைத்து அவரைத் தன் மடியில் கிடத்திக் கொண்டாள்.

எழிலுக்குக் கொஞ்ச கொஞ்சமாக அதிர்ச்சி நீங்கியது; மெதுவாகக் கண்களைத் திறந்தார். 'தாமரை–தாமரை' என்ற வார்த்தைகள் அவருடைய உள்ளக் கடலின் அடியிலிருந்து மேலெழுந்து ஈனஸ்வரத்தில் ஒலித்தன.

'இதோ இருக்கிறேனே அத்தான் அத்தான்......" என்று பரிவுடன் அவர் தலை மயிரைக் கோதிவிட்டாள் தாமரை.

அரைமணி நேரம் கழிந்தது. எழில் நல்ல உணர்வு பெற்ருர், தாமரையைக் கண்டதும்' எப்படி தாமரை வந்தாய் என்று கேட்டு இறும்பூதெய்தினுர்.

"அப்பா வெளியில் போனுர்; நான் எப்படியோ வந்தேன்" என்ருள் தாமரை.

உரையாடலில் முழுக் கவனமும் இருந்து விடவே, நேரம் போனதே தெரியவில்லை.

"நேரமாயிற்று, தாமரை 'என்றேன். 'நான் அத்தானை விட்டு விட்டு வீட்டிற்குப் போகவே மாட்டேன்' என்ருள் தாமரை. நான் எவ்வளவோ கூறினேன் 'அது இருவருக்கும் ஆபத்து' என்று எழிலும் ாபனர பிடிவாதமாக வீட்டிற்குச் செல்ல மறுத்தாள்.

பிறகு, மூவரும் கூடி ஒரு திட்டம் வகுத்தோம். தாமரையும் அதுதான் 'நல்ல வழி' என்ருள் திட்டம் ஏக மனதாக நிறைவேறியது.

"நாங்கள் இரவு மணி பன்னிரண்டரை பூரி எண்டிக்கு ரயில் நிலையத்தில் இருப்போம். உனக்கும் சேர்த்து பயணச் சீட்டு வாங்கி வைக்கிருேம். தவருமல் வந்துவிடும் .. தாமரை! பணம மாத்திரம் கொஞ்சம் எடுத்துவா நகை எதுவும் வேண்டாம்" என்றேன், நான். 'சரி அண்ணு! என்ருள், தாமரை. 'தைரியமாக இருங்கள் அத்தான் என்று எழிலுக்குக் கூறிவிட்டு எழுந்து சென்ருள்.

என்னைப் பற்றி யார் எதைச் சொன்னுலும்சரி எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் சரி—எழிலின் வாழ்க்கைக்கு கட்டாயம் வழி வகுத்தாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். எழிலுக்கு நான் செய்ய வேண்டியது என் கடமையுமாகும்.

எழில் தாமரைக்காகத் தன் உயிரையே பலியிடவும் துணிந்திருந்தார். நாங்கள் இரவு ரயில் நிலையம் சென்று தாமரைக்காகக் காத்துக் கொண்டிருந்தோம். வண்டி வர நான்கைந்து நிமிடங்கள் தான் இருந்தன. அதுவரை தாமரை வரவில்லை. என் சிந்தனை தீவிரமாக இருந்தும் நெஞ்சில் உரமிருந்தும் மனத்தின் 'படபடப்பு' வினுடிக்கு வினுடி அதிகரித்தது புகைவண்டி, நிலயத்திற்கு வந்து நின்றது. இரண்டொரு கண நேரத்தில் ஒரு குதிரை வண்டி வேகமாக வந்து எங்களருகில் நின்றது.

'தாமரைதான்! அவள் வீட்டு வண்டிதான். எவ்வளவு சாமார்த்தியமாக தங்கள் வண்டியையே வைத்துக்கொண்டு வந்து விட்டாள்" என்று எழில் குதித்தார் ஆனுல்...?

வண்டியிலிருந்து தாமரை இறங்கி வந்து'அத்தான் என்று கூறி எழிலை அணைத்துக் கொள்ளவில்லை. தாமரைக்குப் பதிலாக அவளுடைய தந்தை இறங்கி எங்களருகில் வந்தார். அவரைக் கண்டதும் என்

தோள்மீது வைத்திருந்த எழிலின் கை நடுங்கியது. நான் எழிலை என் அருகில் அணைத்துக் கொண்டேன்.

வண்டியிலிருந்து இறங்கிய அவர் எழிலை நோக்கி, 'உனக்கு அறி விருக்கிறதாடா மடையா? உண்ட கத்தையே இரண்டகமாக்கத் துணிந்தாயே! நாயினும் கேடு கெட்டவனே! எப்படியடா நன்றியை மறந்தாய்?' என்று வசைமாரி பொழிந்து கொண்டே எழிலின் கன்னத்தில் நாலு அறை கொடுப்பார் என்று எண்ணினேன். ஆனால் நடந்ததோ வேறு!

அவர் எழிலின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "என்னை மன்னித்துவிடு எழில்! நான் பெரிய தவறு செய்துவிட இருந்தேன். தாமரை தான் தடுத்தாள். சரி—சரி! நீ வா வீட்டிற்குப் போய் பேசுவோம்'' என்றார் பரிவு நிரம்பிய குரலில். அவர் பேச்சில் அன்பு கனிந்திருந்தது.

'எப்படித் தன் தந்தையின் மனதை தாமரை மாற்றியிருப்பாள் என்ற சிந்தனையுடன் தாங்கள் வண்டியில் ஏறினோம்.

வண்டியிலிருந்து இறங்கிய எங்கள் மூவரையும் தாமரையும் அவள் தாயாரும் முகமலர்ச்சியோடு வரவேற்றனர்.

அனைவரும் கூடத்தில் அமர்ந்து மிளகு நீர் பருகினோம் தாமரையும் பூரித்த இதயத்தோடு எங்களுடன் கலந்து கொண்டாள்.

"இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்கள் அண்ணா! அத்தான் நீங்கள் கூட.....ம்... !' தாமரையின் உபசரிப்பு ஏராளம். அவள் தாயாரும் மீண்டும் அவள் முகம் பழையபடி மலர்ந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். அவள் தந்தை அடிக்கடி நெட்டுயிர்த்தார். அவர், அதோ பார்த்தீர்களா பெட்டியை, தாமரை புறப்பட்டுவிட்டாள்; நல்ல வேளையாக நான் பார்த்தேன். கேட்டதற்கு முதலில் அமைதியாக இருந்தாள். பிறகு உண்மையைக் கூறி என்னென்னவோ உதாரணங்களைக்கூறி என் மனதை மாற்றி விட்டாள் குழந்தை சொல்வதிலும் நியாயம் இருக்கிறது என்பதை அப்போது தான் உணர்ந்தேன்'' என்று மனமுருகிப் பேசினார். தாமரை பெருமிதத்துடன் கடைக் கண்ணால் எழிலை நோக்கினாள்.

தாமரையை அவள் விருப்பப்படி எழிலுக்கே மணம் முடித்து வைப்பதாக அவள் தந்தை கூறினார். எழில் என்னை நோக்கினார்.

"எழில் இங்கேயே சாப்பிட்டுக் கொண்டு இருக்கட்டும். இல்லையென்றால் பார்ப்பவர்கள் பழிப்பார்கள். இன்னும் பத்து நாட்களில் முகூர்த்தம் வைத்துவிடலாம். நீங்கள் சொல்வதைப் போல சாதி, மத சம்பிரதாயங்கள் எல்லாம் மனிதர்களாகப் பார்த்துக் கொண்டது தானே?'' என்றார் பெரியவர்.

மறுபடியும் பழைய குப்பையைக் கிளறுகிறாரே என்று எண்ணி, "எழில் இனி உங்கள் மகனைப் போல—அவருக்கு நீங்கள்தான் ஆதரவும்-நான் வரட்டுங்களா?'' என்று எழுந்தேன். 'இருங்கள் இரவு தங்கி, காலையில் செல்லுங்கள்' என்றார் அவர்.

மறுநாள் எழிலிடமும் தாமரையிடமும் விடை பெற்றுக் கொண்டு எழிலின் அறைக்கு வந்துவிட்டேன். எதற்கும் நான்கு நாட்கள் இருந்துவிட்டு ஊருக்குச் செல்வது தான் நல்லது என்றெண்ணி, இன்னும் ஒருவாரம் கழித்து வருவதாக என் மனைவி இந்திராவுக்குக் கடிதம் எழுதிவிட்டுத் தங்கினேன்.

மாலை நான்கு மணிக்குத் தாமரையின் பங்களாவிற்குச் சென்றேன். அவள் தந்தை யாரோ ஒருவனுடன் பேசிக் கொண்டிருந்தார்.

அந்த ஆள், "ஆமாங்க! ஆறு மணி நேரம் கழித்து ஆரம்பித்து, கால்மணி நேரத்தில், முடிந்துவிடும்,'' என்றார். அதைக் கேட்டுக் கொண்டே வந்த தாமரையின் தாயார் "என்னது'' என்றார்.

"ஒன்று மில்லை. அவனுடைய தம்பி, எங்கேயோ ஆலையில் வேலை செய்கிறனும். அதைச் சொல்கிறன்'' என்றார், பெரியவர். தொடர்ந்து, "அது இருக்கட்டும். கார் தயாராக இருக்கிறது. புறப்படு'' என்றார். எனக்கு மனம் என்னவோ போலிருக்கிறது. இரண்டு நாட்கள் பொறுத்துப் போகிறேன்'' என்றார், அந்த அம்மாள. அதைக் கேட்ட பெரியவர் தம் மனைவியைக் கடிந்து நோக்கினார்.

தாமரை அங்கு வந்தாள். "சீக்கிரமாகத் திரும்பி விடம்மா' என்றாள். தன் தாயாரிடம் "ஜாக்கிரதையாக இரு கண்ணே "என்று கூறிவிட்டு அந்த அம்மாள் செல்வதற்கு மனமில்லாது காரில் ஏறிச்சென்றார்கள். பெரியவர் கட்டாயத்தின் பேரில் அவர்களை அனுப்புகிறார் என்பதை நான் எளிதில் புரிந்துகொண்டேன்.

கார் சென்றபின், "நான் தான் அவன் இங்கேயே அடைபட்டுக் கிடக்கிறனே — சென்னைக் காவது போய், இரண்டு நாள் தங்கிவிட்டு வரட்டும்'' என்று அனுப்பினேன்'' என்றார், தாமரையின் தந்தை, அதற்குள் அவருடன் பேசிக் கொண்டிருந்தவனும் பிறகு வந்து பார்ப்பதாகக் கூறிவிட்டுச் சென்றான்.

நானும் தாமரையும் மாடிக்குப் போனோம். ஒரு அறையில் எழில் படித்துக் கொண்டிருந்தார். எழில் பழய எழிலாக விளங்கினார். பறித்துத் தின்று விடலாம் போலிருந்தது, அவரை. அமைதி நிறைந்த அவருடைய புன்முறுவல் தவழும் முகத்தைத் காண்போமா என்று ஏங்கிக் கிடந்த என் மனம் சாந்தியடைந்தது.

"எப்படி நடத்துகின்றார்கள் எழில்?'' என்றேன்.

"மிகவும் நல்ல முறையில்தான் மலை. தாமரையின் அம்மா வந்தவுடன் திருமணத்னைத நடத்தி விட வேண்டும் என்று கூறுகிறார். அவரும் இவ்வளவு விட்டுக் கொடுப்பார் என்று நான் நினைக்கவே இல்லை. கணவனும் மனைவியும் போலவே எங்களை விட்டுவிட்டார். இன்றிரவு நிலாச் சோறு சாப்பிட ஏற்பாடு செய்திருக்கிறார்'' என்றார், எழில். "ஆமாம் அண்ணா! நீங்களும் அவசியம் இருக்கவேண்டும்'' என்று தாமரை கூறினாள்.

"இருக்கட்டும் தாமரை''! அத்தானை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்'' என்றேன்.

"இல்லையண்ணா! நீங்கள் அவசியம் இன்றிரவு இங்குதான் சாப்பிடவேண்டும்'' என்று என் கைகளைப் பிடித்துக் கொண்டாள் தாமரை.

இரவு பிறந்தது. தாமரையின் தந்தை தம்முடன் என்னைச் சாப்பிடும்படி கேட்டுக் கொண்டார். நான் தட்டிப் பேச வழியில்லை. அவருடன் அமர்ந்து உணவை முடித்துக் கொண்டேன். உண்டு ஆன உடனே அவர் ஆற்றுப் பக்கம் போய் வருவதாகக் கூறிவிட்டு வேலையாளுடன் வெளியில் சென்றார். நான் மாடிக்குப் போனேன்.

பால் நிலா பட்டப்பகலாகக் காய்ந்து கொண்டிருந்தது. தாமரை எழிலுக்கு சோறு படைத்துக் கொண்டிருந்தாள். எழில் கொஞ்சம் கொஞ்சமாக சுவைத்துக் கொண்டிருந்தார். நான் உடன் உண்ணவில்லை யென்று தாமரையும் எழிலும் பிணங்கிக் கொண்டனர். பிறகு மூவரும் அமர்ந்து நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

மணி பதினொன்று ஆகிவிட்டது. மாடியிலேயே எனக்கென்று ஒதுக்கப்பட்ட அறையில் நான் படுத்தேன். தாமரையும் எழிலும் பக்கத்து அறையில் படுத்தனர்.

'தாமரையின் தந்தை எப்படி இவ்வளவு விட்டுக் கொடுக்கிறார்; ஏன் விட்டுக் கொடுக்கிறார்—உண்மையிலேயே மனம்மாறியிருந்தாலும் இப்படி யெல்லாமா உரிமை தருவார்கள்' என்றெல்லாம் எண்ணியவாறே படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன்.

சுமார் இரண்டு மணி நேரம் கழிந்திருக்கும். பக்கத்து அறையி லிருந்து அடிக்கடி சிரிக்கும் ஒலி கேட்டது. விட்டு விட்டு 'இச்' சொலிகள் கேட்டன. நான் பக்கத்து அறையில் இருப்பதையே எழில் மறந்துவிட்டார் போலும், போக்கிரித் தாமரை! அவளுக்கல்லவா இருக்கவேண்டும் தன் அண்ணன் பக்கத்தில் இருக்கும் பயம்!!

எந்த ஒரு காரியம் நடைபெருதா என்று எண்ணி எண்ணி ஏக்கம் அடைந்திருந்தேனே அது நிறைவேறிவிட்டது. எது எப்படிப் போனால் என்ன? எழிலின் வாழ்க்கைப் பாதை சீர்பட்டுவிட்டது. அது போதும்—அது ஒன்றே போதும். எனக்கும் என் மனைவி இந்திராவுக்கும் உயிரினும் மேலான நண்பர் குழாத்திற்கும்.

மணி மூன்று இருக்கும் என்று நினைக்கிறேன். உறக்கத்தால் கண் இமைகள் கனத்தன. கண்களை மூடினேன்.

திடீரென்று கதவைத் தட்டும் ஓசை கேட்டது " அண்ணா ! அண்ணா !'' என்று கூறினாள் தாமரை. கலக்கத்துடன் எழுந்து விரைந்து சென்று கதவைத் திறந்தேன்.

''அண்ணா! அண்ணா! அத்தானைப் பாருங்கள், எனக்குப் பயமாக இருக்கிறது.''

பக்கத்து அறைக்குள் ஓடினேன். எழில் இருந்த காட்சி! என் இதயத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன்.

"எழில்—எழில்!''

எழிலின் உடலில் கருமை கலந்திருந்தது. அவருடைய கண்கள் சுழன்றன; வாய் கோணல்கோணலாக இழுத்தது வாயிலிருந்தும் நாசித் துவாரத்திலிருந்தும் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது; கைகளும் கால்களும் காக்கை வலி வந்தவனைப்போல இருந்தன. அய்யய்யோ! அந்தக் கோரமான காட்சியைக் கண்டும் என் கண்கள் அவியவில்லையே!

"எழில்---எழில்...''

என் தன்னம்பிக்கை யெல்லாம் தகர்ந்து தவிடு பொடியாகிவிட்டது. 'எழில்.... அய்யோ....எ....ழி...ல் !''

''அத்தான்'-அத்தான்!'' தாமரை தலையை தரையிலும் சுவற்றிலுமாக மோதிக் கொண்டாள். அவள் நெற்றியும் முகமும் வீங்கிப் புடைத்தன.

எழில் திடீரென்று வெறி கொண்டவரைப் போல எழுந்து 'தாமரை' என்று இரு கைகளையும் நீட்டினர்.

"அத்தான்'' என்று அடிபட்ட பறவையைப் போல அவர் மடியில் வீழ்ந்தாள் தாமரை.

இருவரும் பிணைந்தவாறே கட்டிலில் சாய்ந்தனர். இரண்டாவது எழில் எழுந்திருக்கவே இல்லை. தாமரை நிலை தவறிக் கதறினாள்.

எனக்குக் கைகால் ஓடவில்லை எல்லாம் பத்து நிமிடங்களில் ஆரம்பித்து முடிந்து விட்டன.

மாடியிலிருந்து கீழிறங்கி ஓடினேன். தாமரையின் தந்தை கூடத்திலேயே படுத்திருந்தார். அவர் நான் சென்றபோது எதையோ எதிர் பார்த்தவர் போலக் காணப்பட்டார்.

"என்ன மலையழகன்'' என்று நடுக்கத்துடன் கேட்டார், அவர் குரலில் ஒருவித கலக்கமும் அச்சமும் கலந்திருந்தன.

'எழில்....' என்றேன். 'என்ன அவனுக்கு?' என்று என் மீது எரிந்து விழுந்தார், சற்று சுதாரித்துக்கொண்டு நான் அயர்ந்து நின்றேன். அவர் குரூரமாக என்னைப் பார்த்த பார்வை எனக்கு அருவருப்பை உண்டாக்கியது. மீண்டும், 'விடு விடென்று மாடிக்கு ஓடினேன்

என் சித்தம் கலங்கியது. முன்னாள் மாலை ஒருவன் 'ஆறு மணிக்குமேல் ஆரம்பித்து கால் மணி நேரத்தில் முடிந்துவிடும்' என்று கூறிய வாக்கியத்திற்கும் இப்போது அவர் எரிந்து விழுந்ததற்கும் தொடர்பு இருக்கவேண்டும் என்று கருதினேன்.

ஆம். அதுதான் உண்மை. எழில் உணவு கொண்டபோது மணி எட்டு. உண்டு ஆறுமணி வரைவிஷம்உடலில் ஊறி இருக்

கிறது. பிறகு பதினைந்து நிமிடங்களில் ஆரம்பித்துத்தன் வேலையை முடித்து விட்டது. என்னை எழிலிடமிருந்து பிரித்து உணவு அளித்தன மர்மமும், தம் மனைவியை சென்னைக்கு அனுப்பியதன் காரணமும் இதுவாகத்தான் இருக்கவேண்டும்.

எழிலின் நீட்டிய கைகள் நீட்டிய கால்கள் எல்லாம் போட்டது போட்டபடியே கிடத்தன. என் நெஞ்சில் இரத்தம் பீறிட்டது. தாமரை துடியாய்த்துடித்தாள்—பதறினாள். அவளுக்கு உண்மை எதுவும் தெரியாது. சாகடித்த ஒரு பாம்பை எல்லோரிடமும் காட்டி பழியை அதன்மீது போட்டுவிட்டு அமைதியாக இருந்தார் அவள் தந்தை.

ஒரு நாள் கழிந்தது. தாமரையின் பொன்னிற உடல் முழுதும் கருநீலமாக மாறிவிட்டது. அவள் தந்தை காரணம் தெரியாது தவித்தார். எனக்குத் தெரியும் அதன் காரணம் விஷம் உடலில் ஊறிக்கொண்டிருந்தபோது தாமரையும் எழிலும் இன்ப உலகில் மெய்மறந்து திளைத்துவிட்டனர். எழிலின் இரத்தத்தில் இலேசாக ஊறிக்கொண்டிருந்த நஞ்சு தாமரையின் உடலில் பாய்ந்து விட்டிருக்கிறது.

தாமரை தன் கைகளாலேயே எழிலுக்கு நஞ்சு கலந்த உணவைப் படைத்தது அவளுக்குத் தெரியாது அவள் அதை அறிந் தால்...அவளுடைய உயிரே போய்விடும் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும், என் மனம் என்னைச் சும்மா இருக்கவிடவில்லை. அவளிடம் அவள் தந்தை செய்த சூழ்ச்சி யைச் சொல்லிவிட வேண்டும் என்ற துணிவுடன் அவர்கள் பங்களாவுக்குப் போனேன்.

நான் சென்றபோது நஞ்சு கொடுத்தவனுக்கும் தாமரையின் தகப்பனுருக்கும் ஏதோ தகராறு நடந்து கொண்டிருந்தது. "உங்களால் தானே ஒண்ணுந் தெரியாத அந்தப் புள்ளைக்கு விஷத்தைக் கொடுத்தேன்! இப்போ சொன்ன பணத்தைக் கொடுக்க மூக்கால் அழறீங்களே...." அவன் இரைந்

அதை ஒற்றுக் கேட்டுக் கொண்டிருந்த தாமரை 'ஓ' வென்று கதறிக் கொண்டே உள்ளே ஓடினாள். திரும்பிவந்தபோது அவள் கையில் பெரிய கொடுவாள் இருந்தது.

நான் 'தாமரை—தாமரை' என்று அருகே ஓடுவதற்குள், அவள் "அண்ணா – அண்ணா! இந்தாருங்கள் அண்ணா! என் இதயத்து எழிலுக்கு விஷங்கலந்த சோற்றை எடுத்துப் போட்ட கை இதோ பாருங்கள், அண்ணா" என்று கூவியவாறே தன் வலது கையை ஒரே வெட்டாக வெட்டிக் கொண்டாள். மணிக்கட்டிலிருந்த கை கீழே விழுந்தது. பீறிட்டடித்த இரத்த வெள்ளத்தில் கழுத்தை அறுத்த கோழியைப்போல அந்தக் கை துடித்தது. என்னால் அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை.

தாமரை "அண்ணா—அண்ணா!" என்ற உணர்வுத் துடிப்புடன் தள்ளாடி நடந்து வந்து என் காலடியில் 'தொப்'பென்று விழுந்தாள். அவளைத் தொட்டுத் தூக்கப் போனேன். தொடாதீர்கள் அண்ணா. உங்கள் எழிலைக் கொன்றுவிட்ட என்னைத் தொடாதீர்கள் அண்ணா" என்றாள்.

"அண்ணா! என் நெஞ்சத் திரையிலே நீங்கா ஓவியமாகக் களிநடம் புரியும் என் அத்தானை யாருமே என் இதயத்திலிருந்து பிரிக்க முடியாது" விட்டுவிட்டு வந்த அந்தச் சொற்றொடர் முடிவதற்கும், பட்டு ரோஜாவின் தளிர் உடல் சாய்வதற்கும் சரியாக இருந்தது.

அவள் தந்தை கற்சிலையாக நின்றுகொண்டிருந்தார். கண்களிலிருந்து இரத்தம் ஆறாகப் பெருகியது. சாதிக் கொடுமை நிறைந்த இந்தப் பாழும் சமுதாயத்தை நினைத்து வேதனைப் பட்டேன். எழிலின் நாட்குறிப்பு என் கவனத்திற்கு வந்தது.

**இன்பத்தின் எல்லைக் கோடு துன்பத்தின் துவக்கவிழா, நல்லவர்களுக்கு அவர்கள் வாழ்வில் ஒரு தடவைதான் நல்லநாள் வரும், அதுவும் அவர்கள் இறக்கும் நாளே!"**

# அமெரிக்காவில் என் அனுபவங்கள்

[திருமதி ஆர். காந்திமதி, எம்.ஏ.,பி.டி.]

அமெரிக்க நாட்டில் தான் தங்கியிருந்தபோது அங்கே தான் கண்ட காட்சிகளையும் அறிந்த செய்திகளையும் விளக்கித் திருமதி ஆர். காந்திமதி அம்மையார் அவர்கள் 'ஆனந்தவிகடன்' இதழில் எழுதியுள்ள சுவைமிக்க கட்டுரைகளில் சிலவற்றை 'ஆரம்பக் கல்வி' மூலம் முன்னரே நீங்கள் பெற்று மகிழ்ந்துள்ளீர்கள் அதே தொடரில் வந்த மற்ருேர் கட்டுரை இது)

கிளார்க்ஸ்டன் நகரத்தில் நான் இருந்த வீட்டு அம்மாள் வீட்டு வேலை செய்து பிழைப்பவர்தான். தினமும் வெவ்வேறு வீடுகளுக்குச் சென்று சுத்தம் செய்து சம்பளம் வாங்கிக் கொண்டு வருபவர் ஆள் இரட்டை நாடியானுலும் அவர் குனிந்து நிமிர்ந்து வேலை செய்யக் கொஞ்சமும் தயங்க மாட்டார். அவரை விட எத்தனையோ வயது சின்னவராக இருக்கும் எனக்குக் கூட பல்சமயங்களில் உடம்பு வளைய மறுப்பதை நோக்க எனக்கே வெட்கமாக இருக்கும்!

காலையில் சுமார் ஆறரை மணிக்கே எழுந்திருப்பார். ஏதோ உடை உடுத்திக் கொண்டு அவசரத்தில் காப்பி பலகாரத்தைத் தானே தயார் செய்து ஐந்து நிமிடத்தில் சாப்பிட்டு முடித்துவிட்டு, ஏழு மணிக்கெல்லாம் வெளியில் நிற்கும் தனது பெரிய காரில் ஏறி வீட்டு வேலை செய்யப் புறப்பட்டு விடுவார். அவர் டிரஸ் பண்ணிக்கொண்டு வெளியில் புறப்படுகையில் நாம் பார்த்தால் அவர் ஏதோ பெரிய உத்தியோகத்தில் இருப்பவரோ என்றுதான் நமக்கு நினைக்கத் தோன்றும். தோற்றத்தில் அவருக்கும் என்னுடைய பள்ளிக்கூடத்தில் இருக்கும் ஆசிரியைகளுக்கும் வித்தியாசம் அதிகம் இருக்காது. இதிலிருந்து மற்றவைகளை யெல்லாம் நீங்களே நினைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். நம் ஊரில் எவ்வளவு பெரிய அரசாங்க உத்தியோகஸ்தர் ஆகட்டும், தம் சொந்தப் பணம் போட்டு அவ்வளவு உயர்ந்த ரக கார் வாங்குவது அபூர்வம்தான். அவ்வளவு அழகிய "கிரைஸ்லர்"! கார் வைத்திருந்தார் எங்கள் வீட்டு அம்மாள்!

தங்கள் குடும்பம் ஏழைக் குடும்பம் என்று அந்த அம்மாள் அடிக்கடி சொல்லிக் குறைபடும்போதெல்லாம் எனக்கு முதன் முதலில் அவர் பேச்சில் நம்பிக்கை ஏற்படவில்லை. பிறகு, அமெரிக்க வாழ்க்கையின் போக்குப் பிடிபட்டு, நான் பழகிய பின் அந்தக் குடும்பம் 'நிஜமாகவே' அமெரிக்கக் கணக்குப்படி ஏழைக் குடும்பம் என்பதை உணர்ந்து ஒத்துக் கொண்டேன்.

நாளாக ஆக, அந்த அம்மாள் எப்பேர்ப்பட்ட வீடுகளுக்குத் தான் போய் வேலை செய்துவருகிருர் என்பதை நேரில் போய்க்காணும் ஆவல் எனக்கு அதிகரித்தது. பள்ளிக்கூடம் இல்லாத தினம் ஒன்றில் "நீங்கள் போய் வேலை செய்யும் இடத்திற்கு நானும் கூட வருகிறேனே? வேண்டுமானுல் உங்களுக்குக் கூடமாட நான் உதவி செய்கிறேன்!" என்று அந்த அம்மாளிடம் சொன்னேன் அவருக்கும் என்னை அழைத்துக் கொண்டுபோவதில் அதிக மகிழ்ச்சி. தனியாக வீட்டு வேலை செய்வதை விட, பேசுவதற்கு ஒரு ஆள் அகப்பட்டதே

என்று அந்த அம்மாளுக்குச் சந்தோஷம் போலும்!

இருவரும் காரில் ஏறிக்கொண்டு ஜம்மென்று புறப்பட்டோம். அதி காலையிலேயே லட்சியமில்லாமல் அறுபது மைல் வேகத்தில் காரை விட்டார். முன் 'ஸீட்டுக்கு எதிரே இருந்த அழகிய ரேடியோ இன்னிசையைப் பொழிய ஆரம்பித்தது. இவ்வளவு உல்லாசமான வாழ்க்கை வசதிகள் இருந்தால் நம் நாட்டில் உயர்ந்த பட்டதாரிகள் கூட தாராளமாகத் தயங்காமல் வீட்டு வேலைகளைச் செய்யப்போவார்களே என்று நினைத்துக் கொண்டேன்.

வீட்டுக்கு வெளியே காரை நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்தோம். வீட்டில் யாருமே இல்லை. அது ஒருபெரிய இல்லம்.எங்குபார்த்தாலும் உயர்ந்தவிலையுள்ளசாமான்கள்தான் சுற்றிலும் காணப்பட்டன. வைத்தது வைத்தபடி சுத்தமாகத் தானே இருக்கிறது. இதில் இந்த அம்மாள் செய்வதற்கு என்ன வேலை இருக்கிறது' என்றுதான் எனக்கும் சந்தேகம். இருப்பினும் வந்ததி லிருந்து அன்று ஆறு மணி நேரத்திற்கு விடாமல் அவர் எல்லா வேலைகளையும் செய்து முடித்தார். ஒரு நிமிடம் கூட உட்காரவில்லை.

'ஏதாவது உதவி செய்கிறேனே' என்று நான் சொல்லியும் அவர் கேளாது "அதெல்லாம் வேண்டாம். சோபாவில் உட்கார்ந்து நீ பேசிக் கொண்டிருந்தாலே போதும். அல்லது அதோ அலமாரியில் புத்தகங்கள் உள்ளன. எடுத்துப்படி.சங்கோசப்படாமல், இதை உன்வீடு என்று நினைத்துக்கொள். இந்த இல்லம் எனக்கு ரொம்பப் பழக்கமானது தான். பத்து வருடமாக வாரம் ஒரு முறை வந்து இங்கு வேலை செய்து வருகிறேன். இங்கு வசிக்கும் தம்பதிக்கு என்மீதும் என் குடும்பத்தின் மீதும் அதிக வாஞ்சை. நான் கொஞ்சநாள் வியாதியால் ஆஸ்பத்திரியில் இருந்தபோது கூட இவர்கள் என்னை அடிக்கடி வந்து பார்த்து தேற்றிப் போனார்கள் குடும்பத்தில் எனக்கு அதிகப் பிடுங்கல்கள் என்று நன்கு தெரிந்த இந்த தம்பதி சமயம் கிடைக்கும் போதெல்லாம் ஆறுதல் சொல்லாமல் இருக்க மாட்டார்கள்" என்று அன்பு ததும்ப வெளிவந்த அவரது நன்றி கலந்த வார்த்தைகள் என் மனத்தை உருக்கி விட்டன என்று நான் சொல்ல வேண்டும்.

மூன்று மணி நேரத்திற்குப் பிறகு சமையல் அறையில் உள்ள ரெபிரிஜி ரேட்டரைத் திறந்து கொஞ்சம் பால் எடுத்து எனக்குக் காப்பி போட்டும் கொடுத்தார். நாற்பத்தைந்து வயதிற்கும் மேலான அந்த அம்மாள் கஷ்டப்பட்டு உழைக்க, அதை உட்கார்ந்து கொண்டு வேடிக்கை பார்க்க எனக்கு என்னமோ போல்தான் இருந்தது. 'ஏன் இவர் கூட வந்தோம்' என்றும் நினைத்துக் கொண்டேன்.

என்னுடைய பொழுது போக்குக்காக வேண்டி அங்கிருந்த பெரிய டெலிவிஷனையும் திருப்பி விட்டார். நேரம் போனதே தெரியவில்லை. துணிகளை யெல்லாம் துவைத்து, பெட்டி போட்டு, படுக்கைத் துணிகளை மாற்றி சமையல் அறை உள்பட யாவற்றையும் பெருக்கி எப்படி அவ்வளவு துரிதமாகச் செய்து முடித்தார் என்றுதான் எனக்கு அதிசயமாக இருந்தது. எல்லாம் ஆன பிறகு, அங்கொரு புறமாகத் தயாராக வைக்கப்படிருந்த தனது சம்பளத்தையும் எடுத்துக் கைப்பையில் போட்டுக்கொண்டு புறப்பட்டு விட்டார். விளக்குமாறு பிடிக்கும் கைக்குக் கார் ஓட்டத் தெரிவதும் கலியுலகத்தின் திருவிளையாடல் தான் என்று என்னல் அப்போது நினைக்காமல் இருக்க முடியவில்லை.

வீட்டு வேலையில் மிகவும் திறமை உள்ளவர் என்று அந்த அம்மாளுக்கு லூயிஸ்டன்-கிளார்க்ஸ்டன் நகரங்கள் பூராவும் நல்ல பெயராம். அதனல் தினம் அந்த அம்மாளுக்குப் பல இல்லங்களிலிருந்து வேலை செய்ய வேண்டி அழைப்பு வரும்.

"இன்னும் இரண்டு நாளைக்கு ஏற்கெனவே இரண்டு மூன்று வீடுகளில் ஒத்துக் கொண்டுள்ளேன். அதனால் அதற்கு மறுநாள் வருகிறேன்" என்று அந்த அம்மாள் பதில் கூறுவதையும் பார்த்திருக்கிறேன். என்னே வேலைக்காரிக்கு அங்கு இருக்கும் கிராக்கி!

சில சமயம் அவர் காலையில் ஒரு வீடும் பிற்பகல் ஒரு வீடும் போய் வேலை செய்து விட்டு வருவார். வழக்கமாக அவர் மாலை வேளைகளில் மிகவும் களைப்புடன் வீட்டுக்கு திரும்புவதால் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்த பின் அவருடைய பெண்கள் இராச் சாப்பாட்டைச் சமைப்பது வழக்கம். களைத்து வீடு திரும்பும் இவருக்கு வீட்டில் ஏதேனும் குளறுபடியிருப்பின் மூக்கு மேல் கோபம் வந்து விடும். சில வேளை கத்துவார். இதற்குப் பயந்து கொண்டே அந்த அக்கா தங்கை இருவரும் தங்களுக்குள் இருக்கும் வாக்கு வாதங்களையும் ஒத்திப் போட்டுவிட்டு சாப்பாடுவிஷயத்தில் கவனம் செலுத்தி, தாயார் வருவதற்குள் எல்லாவற்றையும் செய்து முடிப்பார்கள். பாவம்! துள்ளி விளையாடும் வயதில் அக்குழந்தைகளுக்கு வீட்டு பாரம் கொஞ்சம் இருப்பதைக் காண எனக்கு பரிதாபமாயிருக்கும்.

அவர்களுடைய தகப்பனாரும் உள்ளூர் தினசரிப் பத்திரிகை ஆபீஸில் வேலை செய்பவர். ஆனால் அவருக்கும் வருவாய்அதிகமில்லை இருந்தாலும் அவருக்கும் ஒரு தனிகார் இருந்தது. பெண்களெல்லாம் தங்கள் சைக்கிளில் தான் பள்ளிக்கூடம் செல்வார்கள். நான் இருந்த வீட்டில் எல்லாம் அம்மாள் ஆதிக்கம்தான்! ஐயா இருக்கும் இடமே தெரியாது!

வீட்டு வேலையைப் பற்றி இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். உத்தியோக நிமித்தமாக, வீட்டு வேலை செய்ய நேரமில்லாது அதற்கென வாரத்திற்கு ஒரு முறையாகிலும் வேலைக்கு ஆள் தருவிப்போர் கூட தினப்படி தாங்களே தான் கடைக்குசென்று வீட்டுக்கு தேவையான சாமான்கள் அனைத்தையும் வாங்கிக் கொண்டு வருவார்கள். நாம்தான் இவைகளையெல்லாம் புதுமையாக நோக்குகிறோமே யொழிய, அவர்களுக்கு இவையெல்லாம் சர்வ சாதாரணம்.

சிற்சில தினங்களில் அபூர்வமாக அநேக விருந்தாளிகளை இரவு சாப்பாட்டிற்கு அழைத்திருக்கும் பட்சத்தில், அதற்காக வேண்டி ஆள் தருவித்துக் கொள்வதும் அங்கே உண்டு. எத்தனை மணி நேரம் வேலை செய்கிறார்களோ அத்தனைக்கும் சம்பளம்தான்.

வட இந்தியாவிற்கும் தென் இந்தியாவிற்கும் எவ்வளவு வேறுபாடுகள் உள்ளனவோ, அவ்வளவு வித்தியாசங்கள் அமெரிக்க நாட்டில் வடக்கே உள்ள மாகாணங்களுக்கும் தென், மாகாணங்களுக்கும் இடையே இருக்கின்றன.

அந்நாட்டில் தெற்குப் பாகத்தில் வேலைக்காரியின் சம்பளம் கொஞ்சம் குறைவுதான். அதோடு இப்பாகத்தில் நீக்ரோ மக்கள் அதிகம் வசிக்கின்றனர். ஆகவே தெற்கே உள்ள வெள்ளைக்காரர்களின் இல்லங்கள் அநேக வற்றில் இந்த நீக்ரோ இனத்தைச்சேர்ந்த வேலைக்காரிகளும் சதா வீட்டோடேயே இருந்து வேலை செய்து பிழைக்கிறார்கள்.

நம்மைபோல் ஏராளமான பவுன் நகைகளை அமெரிக்கர்கள் வாங்கி தங்கள் வீடுகளில் வைத்திருப்பது இல்லை. ஆகவே வீட்டுவேலைக்காரிகளையும் தனியே வீட்டில்விட அவர்கள் தயங்குகிறதில்லை. அதோடு, அங்கே பெரும்பாலும் பற்று வரவு எல்லாம் 'பாங்கு செக்' மூலமாகத்தான் நடத்துவதால் பொதுவாக வீட்டில் ரொக்கப்பணமும் வைத்திருப்பதில்லை. இருக்கும் கொஞ்ச பணத்தையும் தங்களுடனேயே வெளியே போகும்போது கொண்டு போய் விடுவார்கள். ஆகவே, வீட்டில் வேலைக்காரிக்கு திருடுவதற்கு ஒன்றும் இருக்காது.

போய் வேலை செய்யும் வீடுகளில் எத்தனை சாமான்கள் இருக்கின்றனவோ அப்படி தேவைப்படும் அத்தனை சாமான்களும் வேலைக்காரியின் வீடுகளிலும் இருப்பதால் திருட வேண்டிய அவசியம்தான் என்ன?

வீட்டில் டிராயர்கள், அலமாரிகள் படுக்கை அறைகள் அனைத்தும் திறந்தபடியேதான் கிடக்கும் இருந்தும் தனியே வேலை செய்யும் வேலைக்காரிகளுக்கு இவற்றைத் திறந்து பார்க்கும் ஆவல் பொதுவாக இருப்பது இல்லை. அதிசயமாக நம்மைப் பிறத்தியார் வீட்டுக்குள் தனியே நுழைய வைத்தால் கொஞ்சம் துருவி ஆராயத்தான் இந்த மனது செல்லும். ஆனால் வாழ்நாள் முழுவதும் தினம் ஒரு வீட்டில் வேலை செய்யும் நிலையில் இந்தக் கெட்டபுத்தி உதிப்பதற்கு இல்லைதான்!

இம்மாதிரி வீட்டு வேலை செய்யும் பெண்களை விட ஆபீஸில் குமாஸ்தா வேலை பார்க்கும் பெண்கள் அங்கே ஒன்றும் அதிகமாகச் சம்பாதிப்பதில்லை. ஆகவே, இந்த நாட்டில் வீட்டு வேலை ஒரு குறைவான பிழைப்பு அல்ல.

என் வீட்டு அம்மாளின் குழந்தைகளுக்கு உள்ள டிரஸ் வகையருக்களுக்கு யாதொரு குறைவும் இல்லை. இவருடைய பதினேழு வயது மகன் எங்கள் கிளார்க்ஸ்டன் பள்ளிகூடத்தில் மாணவர்கள் சங்கத்தின் உபதலைவன். எல்லோருக்கும் அவன் மீது பெரிய மதிப்பு. வேலைக்காரியின் மகனாயிற்றே என்று மாணவர் சமூகத்தில் அவன் ஒருக்காலும் ஒதுக்கப் பட்டதே இல்லை.

அங்கே பள்ளிக்கூடங்களில் கூட்டிப் பெருக்கித் துடைத்துச் சீராக வைக்கப் பொறுப்பாயிருக்கும் ஆட்களுக்குப் பொதுவாக 'ஜானிடர்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். நாம் பியூன் என்று பொதுவாக அழைப்பது போலவே இதுவும்! அவர்களுடைய குழந்தைகளுக்கும் எங்கள் பள்ளிக் கூடத்திலேயே கட்டாய இலவசக் கல்விதான். அது மட்டுமல்ல. 'ஜானிட'ரின் குழந்தைகளைப் பார்க்கையில் அவர்களுக்கும் மற்ற பணவசதி மிக்கவர்களின் குழந்தைகளுக்கும், வளமையிலும், வசீகரத்திலும், உடையிலும் போஷணையிலும், பேச்சுத்திறனிலும், தைரியத்திலும் யாதொரு வித்தியாசமும் காணப்படமாட்டாது.

தங்கள் அப்பா ஜானிடர் என்று சொல்லிக் கொள்வதற்கும், அம்மா வீட்டுவேலை செய்துதான் பிழைக்கிறவர் என்று சொல்லி கொள்வதற்கும் இந்தக் குழந்தைகள் பின் வாங்கி வெட்கப்படுவது கிடையாது.

அங்கு கொஞ்ச நாட்கள் இருப்பதற்குள்ளேயே அந்த அமெரிக்க வாழ்க்கையே மிக சகஜமாகப் போய் விட்டாலும், அந்தமாதிரி சில நுட்பமான விஷயங்களைக் கவனிக்கையில் நமக்கே ஆச்சரியமாகவும், சுவாரஸ்யமாகவும்தான் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை, ஒவ்வொரு சிறுவிஷயத்திலும் வாழ்க்கை விதம் நாட்டிற்கு நாடு எவ்வளவு வித்தியாசப்படுகிறது? அது விந்தைதான்.

வீட்டு சம்பந்தமான சகலமான காரியங்களையும் எவ்வளவு துரிதமாகவும் சுலபமாகவும் செய்து முடிக்க வேண்டுமோ அதற்கான வசதிகளைக் கண்டு பிடித்து அளிப்பதிலும், காலப் போக்கில் எப்படி அதிகரித்துக் கொடுக்கலாம் என்று ஆராய்ச்சி செய்து புதிது புதிதாகக் கண்டு பிடிக்கவும் பல நிபுணர்கள் அந்த நாட்டில் இப்போதும் இராப்பகலாய் உழைத்தவண்ணம் இருக்கின்றனர். கண்டு பிடிப்பது கூட பெரிய காரியமல்ல, அவை எப்படி மக்கள் உபயோகத்திற்காக அவ்வளவு சீக்கிரம் நாடு பூராவும் பரவி விடுகின்றன என்பதுதான் ஆச்சரியம்!

# வெள்ளை மாளிகை

அ. இராமதுரை

இந்தியக் குடியரசுத் தலைவரின் இல்லத்தை 'ராஷ்டிரபதி பவன்' என அழைப்பதுபோல அமெரிக்கர்கள் தங்கள் குடியரசுத் தலைவரின் இல்லத்தை "வெள்ளை மாளிகை" எனப் பெருமிதத்தோடு அழைக்கிறார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைநகரான வாசிங்டனில் இவ் வெள்ளை மாளிகை சுமார் பதினெட்டு ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் அமைந்துள்ளது. இம்மாளிகையின் அடிக்கல் ஆயிரத்து ஏழுநூற்றுத் தொண்ணூற்றிரண்டாம் ஆண்டு அக்டோபர் திங்கள் பதிமூன்றும் நாள் நாட்டப்பட்டது. இம்மாளிகைக்கான இடம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முதல் குடியரசுத் தலைவரான வாசிங்டனால் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதற்குத் திட்டங்களை தீட்டித் தந்தவர் ஜேம்சு காபன் என்ற அயர்லாந்து கட்டிடக்கலை வல்லுநர் ஆவர். வாசிங்டன் அடிக்கல் நாட்டியபோதிலும் அதிர் அதில் வாழக் கொடுத்துவைக்கவில்லை. அம்மாளிகையில் முதன் முதலாக வாழ்ந்த பெருமை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இரண்டாவது குடியரசுத் தலைவரான சான் ஆடம்சு என்பவரைச் சாரும். ஆடம்சு அதில் வாழ்ந்த போதிலும அம்மாளிகை அரைகுறையாகவே கட்டி முடிக்கப் பெற்றிருந்தது. ஆடம்சுக்குப் பிறகு வெள்ளை மாளிகை மறுபடியும் நன்றாகக் கட்டப்பட்டது; இது நடந்தது ஆயிரத்து எண்ணூற்றுபதினான்காம் ஆண்டில். அப்பொழுது ஆங்கிலேய அரசு அமெரிக்காவின் மேல் படையெடுத்தது. அதன் பயனாக வெள்ளை மாளிகை ஆகஸ்டுத் திங்கள் பதினேழாம் நாளில் தீக்கிரையாக்கப்பட்டது. மறுபடியும் சேம்சு ஹாபனின் முயற்சியினால் 1817-ல் மீண்டும் உறுதியாகக் கட்டப்பட்டது.

1948-ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசுத் தலைவரான ட்ருமன் வெள்ளை மாளிகையை புதுப்பிக்கும்படி கட்டிடக்கலை வல்லுநர்களை வேண்டினார். அவரது பெரு முயற்சியினால் பல ஆண்டுகளுக்குப் பின் வெள்ளை மாளிகை புதுப்பிக்கப்பட்டது. அதற்காக சுமார் 5,761,000 டாலர்கள் செலவழிக்கப்பட்டன.

இரண்டாவது உலகப் பெரும் போர் நடைபெற்ற நாட்களில் வெள்ளை மாளிகையில் பயணிகள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. மேலும் லிங்கனின் இறப்புக்குப் பின் உல்லாசப் பயணிகள் இம் மாளிகையைக் காண்பதற்காகச் செல்லுகையில் நன்கு பரிசோதிக்கப்பட்டனர். இவை வெள்ளை மாளிகையைப் பற்றிய மேலான விவரங்கள். இனி வெள்ளை மாளிகையினுள் செல்வோம்.

வெள்ளை மாளிகை மூன்று மாடிகளைக் கொண்ட கட்டிடமாகும். இதில் நூற்று மூன்று அறைகள் உள்ளன. 21 படுக்கை அறைகள், 19 குளியலறைகள், மலம், நீர் கழிக்க 12 அறைகளும், குடியரசுத் தலைவரின் அலுவலகங்களும் இதில் உள்ளன. இதனுள் நாற்பது வாயில்கள் (Corridors) உள்ளன. ஒருவகை வெண்ணிற மண் இதைக் கட்டப் பயன்படுத்தப் பட்டதால், இதற்கு வெள்ளை மாளிகை எனப் பெயர் வந்தது என சிலரும். வெண்ணிறப் பூச்சு இதன் மேல் பூசப்பட்டிருப்பதால் (1817 முதல்) இதற்கு இப்பெயர் ஏற்பட்டது எனவும் கூறுகிறார்கள். ஆயினும்

1902-ல் அமெரிக்கத் தலைவராக இருந்த தியோடர் ரூசுவெல்ட் காலத்திலிருந்துதான் இதுஅதிகாரப்பூர்வமாக வெள்ளைமாளிகை என்ப பெயர் பெற்றது. இதில் உள்ள இரண்டாவது மூன்ருவது மாடிகளைக் காண உல்லாசப் பயணிகள் அனுமதிக்கப்படுவதில்லை. இரண்டாவது மாடியில் தலைவரின் படுக்கை அறைகள், உட்காரும் அறைகள், படிக்கும் அறைகள், விருந்தினர் அறைகள் முதலியன உள்ளன. ஆபிரகாம் லிங்கன் இங்கே உள்ள படுக்கை அறையில்தான் அடிமை விடுதலை அறிக்கையை எழுதியதாகக் கூறுகிருர்கள்.

இம்மாளிகையில் உள்ள பல பொருள்கள் பரிசுகளாக பிற நாட்டினரால் அளிக்கப்பட்டவை. மலர்கள் வரையப்பட்ட ஓவியம் ஒன்று கண்ணுடியில் பதிக்கப்பட்டுள்ளது. இதுவும் மெழுகுவர்த்தி செருக ஒரு தங்கக் கருவியும் இங்கிலாந்து மன்னர் ஆரும் ஜார்ஜுக்கு உரியவை. இவை அவரது மகளால் (தற்பொழுதுள்ள எலிசபெத் அரசி பரிசளிக்கப்பட்டவையாம். நீல அறையில் பிரான்சு நாட்டுக் குடியரசுத் தலைவர், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வில்லியம் மக்கின்லேக்குப் பரிசாக அளித்த நீல, மலர் செருகும் கருவி (Vase) உள்ளது. இவ்வறையில்தான் குரோவ் கிளீவ்லந்து என்பவர் மணம் புரிந்து கொண்டார். வெள்ளை மாளிகையின் வரலாற்றில் இதுவே முதன் முதலாக நடைபெற்ற திருமணமாகும். ஜேம்சு மன்ருே என்ற மற்ருெரு குடியரசுத் தலைவர் விலைக்கு வாங்கிய மினர்வா கடிகாரமும் மெழுகுவர்த்தி பிடிப்பான்களும் இவ்வறையிலேயே உள்ளன. மேலும் வெள்ளை மாளிகையில் உள்ள அறைகளுள் இதுவே மிகுந்த அழகு வாய்ந்த அறையாக எல்லாராலும் கருதப்படுகிறது.

பச்சை அறையில் அமெரிக்க குடியரசுத் தலைவரான கால்வின் கூலிட்சின் துணைவியாரால் பாரிஸ் நகரில் வாங்கப்பட்ட சரவிளக்கு இருக்கிறது சிவப்பு அறையில் ஒரு இசைக்கடிகாரம் உள்ளது. இது பிரெஞ்சு தூதுவரால் குடியரசுத் தலைவர் ட்ருமனுக்குப் பரிசாக அளிக்கப்பட்டது ஆகும். வெள்ளை மாளிகையில் உள்ள அறைகளில் மிகப் பெரிய அறை கிழக்கு அறையாகும். இங்குதான் நடனங்கள், வரவேற்பு நிகழ்ச்சிகள் முதலியன நடைபெறுகின்றன. இங்கு கில்பர்ட் ஸ்டூவர்ட் என்பவர் வரைந்த வாசிங்டனின் ஓவியம் உள்ளது.

இதில் உள்ள மூன்ருவது மாடியில் குடியரசுத் தலைவரின் குடும்பத்தினரும், இரண்டாவதில் அவரது விருந்தினரும் வசிக்கின்றனர் நீல அறை, பச்சை அறை, சிவப்பு அறை, முதலியவற்றைத் தவிர இதில் சீன அறை ஒன்றும் உள்ளது. இதில் சீனர்களால் செய்யப்பட்ட பலவகைப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன.

வெள்ளை மாளிகையைப் பற்றிய சுவையான செய்திகளுள் இதுவும் ஒன்று. இது டப்ளினில் உள்ள லின்சுடர் பிரபுவின் மாளிகையை முன்மாதிரியாகக் கொண்டு கட்டப்பட்டது. இதில் உள்ள பலகணிகள் காம்டீனில் (பிரான்சில் உள்ளது) உள்ள "French Royal Chateau" என்ற கட்டிடத்தின் பலகணிகளைப் போல அமைக்கப்பட்டவையாகும். மீதி உள்ள பகுதிகள் ரோமில் உள்ள பார்னீசு மாளிகை (Farnese Palace) யைப் பார்த்து அமைக்கப்பட்டன.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர்கள் வாழும் இவ்வெள்ளை மாளிகையின் தற்போதைய மதிப்பு சுமார் அறுபது மில்லியன் டாலர்கள், அதாவது சுமார் முப்பது கோடி வெண்பொற்காசுகள்.—தமிழ்நாடு'

# சொற் சுவை

## பண்டித அ. கந்தசாமிப்பிள்ளை

மாந்தர் தம் ஐம்புலன்களாலும் சுவைத்து, உணர்ந்து, மகிழும் பொருள்கள் பல. அவற்றுள், செவியாற் சுவைத் துணர்ந்து மகிழும் சுவையே சாலச் சிறந்ததெனவும், அச்செவிச்சுவையை யுணராத மாந்தர் இருப்பதும் ஒன்று, இறப்பதும் ஒன்று (உடம்பின் பயன் பெற்றிலர்) எனவும், வள்ளுவர் பெருமகன்;

செவியுணவிற் கேள்வி
யுடையார் அவியுணவின் ஆன்ரு
ரோடு ஒப்பர் நிலத்து.

செவியிற் சுவையுணரா
வாயுணர்வின் மாக்கள் அவியி
னும், வாழினும் என். என்னும் திருக்குறட் பாக்களால் வலியுறுத்துகிறார்.

அச்செவிச் சுவை தான், சொற் சுவை, பொருட் சுவையென இரு வகைப்படும். அவற்றுள் சொற் சுவையைப் பற்றி இரண்டொரு எடுத்துக்காட்டுகள் காண்போம்.

1. ஒரு கால் — காலஞ்சென்ற புலவரேறு, அ. வருதநஞ்சையனார், தம் மாணாக்கருக்கு நன்னூல் பாடஞ் சொல்லி வருகையில், நன்னூலில்: ஒரு தொடர் ஒரு பொருளாகவும், பிரிந்து நின்று இரு பொருளாகவும் வரும் என்பதை குன்றேறுமா, குறும்பரம்பு என்பன (சூ-ம் 191 குன்று ஏறுமா- (குன்றில் ஏருத விலங்கு) குன்று ஏறு ஆமா—(குன்றில் ஏறும் காட்டுப் பசு) எனவும்; குறும் பரம்பு—(குறுகிய பரம்புச் சட்டம்) குறும் குறும்பர் அம்பு—(குறுநில மன்னர் விடும் அம்பு) எனவும் வரும் என்று எடுத்துக் காட்டுகளால் விளக்கிவரும் பொழுது, ஒரு மாணவர் இது போன்ற வேருெரு எடுத்துக் காட்டு வேண்டவே, அவர்,

"யாம் முருகனை எமக்குறவன் என்போம்' என்றனர்.

இங்கு எமக்குறவன் என்பது எம-குறவன் (கொடிய குறவன்) எனவும், எமக்கு-உறவன் (எமக்கு உறவுடையோன்) எனவும் பொருள் பட்டு, சுவைத்தறியும் சொற்சுவை பயப்பதை யறிக.

மற்ருெரு புலவர், ஒரு மாணவரைப் பிங்கலநிகண்டு படிப்பிக்குங்கால், குமரன் தெய்வ குஞ்சரி மணாளன், சேந்தன் குறிஞ்சிக் கிழவன் செட்டி...... இணைய ஆறுமுகக் கடவுள் பெயரே'' என்று பாடம் நடக்கும்பொழுது, மாணவர், 'ஐய, முருகனைச் செட்டி என்கிறீர்களே, செட்டியார் என்ருல் அவருக்குக் கடையுண்டா?' என்று வினவ, அப்புலவர், ''முருகனுக்கு முதல் இருந்தால் அன்ரே கடையிருக்கும். அவனுக்கு முதலும் இல்லை. கடையும் இல்லை'' என்றனர்.

இது, ''முதலிலார்க்கு ஊதியமில்லை'' என்ற திருக்குறளின் படி, முதற் பொருள் இன்மையால் கடை வைக்க இயலவில்லை யென்றும், தோன்றின மறையும் (''தோற்றம் உண்டேல் மரணம் உண்டு'' சுந்தரர் தேவாரம் என்னும் நியதிப்படி பிறத்தலில்லாத கடவுளுக்கு இறத்தலும் இல்லையெனச் சுவை பயந்து மகிழ்வித்தல் காண்க.

இவ்வாறு வருவதனை அணியிலக்கணம் உடையார் சிலேடையணி என்பர். இவற்றுள் முன்னது பிரமொழிச் சிலேடையும், பின்னது செம்மொழிச் சிலேடையும் ஆகும்.

—x—

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press 2/65, Broadway, Madras-1.